بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ
وَلَقَدْ نَصَرَكُمُ اللهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 9

இதழ் 44 & 45

# பதர்

வாரா இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1446 - ரபீயுஸ் ஸானீ 27 ஜமாதில் அவ்வல் 04
ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - 31 அகா-நுபுவ்வத் 04 ★ அக்டோபர் 31- 04 நவம்பர் 2024

## அல்லாஹ்வின் கட்டளை

وَاِنْ تَعُدُّوْا نِعْمَةَ اللّٰهِ لَا تُحْصُوْهَا ۭ اِنَّ اللّٰهَ لَغَفُوْرٌ رَّحِيْمٌ ○

**பொருள்**

நீங்கள் அல்லாஹ்வின் அருட்களை எண்ணத் தொடங்கினால், அவற்றை உங்களால் (ஒருபோதும்) கணக்கிட முடியாது. நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.

(அல் நஹ்ல் - 09)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நினைவிற் கொள்ளுங்கள்! ஈமான் மாபெரும் விஷயமாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### ஸஹாபிகளின் ஈமான்

நான் மீண்டும் ஸஹாபிகளின் நிலைமையை முன்னுதாரணமாக எடுத்து வைத்து கூறுகின்றேன். அதாவது அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டு தமது நிலைகளில் இந்த விஷயத்தை காட்டிக் கொடுத்தார்கள். அதாவது, அந்த மறைவிலும் மறைவான இறைவனை, மேலும் பொய் தெய்வங்களை வணங்கக் கூடியவர்களிடமிருந்து மறைவாக இருக்கக் கூடிய அந்த இறைவனை அவர்கள் தமது கண்களால்; ஆம்! தமது கண்களால் கண்டு விட்டார்கள் என்பதை வெளிப்படுத்திக் காட்டினார்கள். அவ்வாறில்லையென்றால், இந்த விஷயங்களையெல்லாம் அவர்கள் சற்றும் எப்படி பொருட்படுத்தாமல் இருந்தனர். அதாவது, அவர்கள் நாட்டைத் துறந்தனர்; சொத்துக்களை இழந்தனர்; அன்பர்கள் மற்றும் உறவினர்களுடன் தொடர்பை முறித்துக் கொண்டனர்; அவர்களுக்கு இறைவன் மீது மட்டுமே நம்பிக்கை இருந்தது. ஏக இறைவனின் மீது நம்பிக்கைக் கொண்டு அவர்கள் இந்த விஷயங்களை எல்லாம் காட்டிக் கொடுத்தார்கள். வரலாற்றைப் படித்துப் பார்த்தால் பின்னர் மனிதன் ஆச்சரியத்தில் உறைந்து விடுவான். அந்த விஷயம் வெறும் ஈமானாக மட்டுமே இருந்தது. அதைத் தவிர வேறு ஒன்றும் இருக்கவில்லை. அதனால் தான் அவர்களை எதிர்த்து நின்ற உலகவாதிகளின் சதித் திட்டங்களும், முழுமையான முயற்சிகளும், நடவடிக்கைகளும் செய்யப்பட்டபோதிலும் அந்த எதிரிகளால் வெற்றி பெற முடியவில்லை. அவர்களின் எண்ணிக்கை, கூட்டம், செல்வம் அனைத்தும் அதிகமாக இருந்தது. ஆனால் அவர்களிடம் ஈமான் இருக்கவில்லை. அவர்கள் ஈமான் இல்லாத காரணத்தினால் மட்டுமே அழிந்து போனார்கள்; மேலும் வெற்றியின் சூழலை அவர்களால் பார்க்க முடியாமல் போனது. ஆனால், ஸஹாபிகள் ஈமானிய ஆற்றலின் மூலமாக அனைவரையும் வெற்றி கொண்டு விட்டனர். எழுதப் படிக்க தெரியாத நிலையில் வளர்ந்து ஆளாகிய ஒரு நபர்; ஆயினும், அவர் தனது உண்மையிலும், நேர்மையிலும்,

இதன் தொடர்ச்சி. 16-ம் பக்கம் ......

## நபி எப்போது வந்தாலும் அவர் மக்களை சீர்திருத்துவதற்காக திட்டங்களை வகுக்கின்றார். அப்போது ஷைத்தான் அவரது வழியில் தடைகளை ஏற்படுத்த துவங்கி விடுகின்றான். ஆனால் அதன் விளைவு எப்படி அமைகின்றது என்றால் நயவஞ்சகர்கள் மற்றும் பலவீனமான ஈமான் கொண்ட மக்கள் தனித்து (சென்று) விடுகின்றனர்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்ஹஜ் வசனம் 56-ற்கு வழங்கிய விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நபிமார்களின் வழிகளில் ஷைத்தான் தடைகளை ஏற்படுத்த அல்லாஹ் ஏன் அனுமதிக்கின்றான்? என்ற கேள்வி தற்போது எழுகின்றது. இதற்கு பதிலளித்தவாறு அல்லாஹ் கூறுகின்றான்: நாம் ஏன் அவ்வாறு செய்கின்றோம் என்றால், இந்த ஷைத்தானிய குழப்பங்களின் மூலமாக நபிமார்களின் ஜமாஅத்துகள் எல்லா வகையான நயவஞ்சகம் மற்றும் நம்பிக்கையற்ற மக்களிடமிருந்தும் தூய்மையாகி விட வேண்டும் மேலும் எதிரிகளின் பகைமை மக்களின் மீது வெளிப்பட்டு விட வேண்டும் என்பதாகும். மேலும் எவர்களின் உள்ளங்கள் கடினமாக ஆகிவிடுகின்றனவோ அவர்கள் அவனது கூற்றை ஏற்றுக் கொண்டு விடுகின்றனர். மேலும் காரணமின்றி நம்பிக்கையாளர்கள் மீது அநீதியிழைக்கத் துவங்கி விடுகின்றனர். ஆக, பலவீனமான ஈமான் கொண்டிருந்த மக்களின் பலவீனமும், எதிரிகளின் பகைமையும் இரண்டும் வெளிப்பட்டு விடுகின்றன. மேலும், இஸ்லாத்தின் எதிரி பிடிவாதம் மற்றும் எதிர்ப்பில் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கின்றார் என்பது தெரிந்து விடுகின்றது.மேலும் இஸ்லாத்தின் மீது உண்மையான ஈமான் கொள்ளக் கூடியவர்கள் தீயவர்களின் தீங்குகளுக்குப் பயப்பட மாட்டார்கள் என்பதும் தெரிய வருகின்றது. இன்னும் கூறப் போனால், அவர்கள் ஈமானில் மேலும் முன்னேறுகின்றனர்; மேலும் இவ்வாறு நம்பிக்கையாளர்களை அல்லாஹ் ஹிதாயத் எனும் நேர்வழியில் முன்னேறச் செய்து கொண்டே செல்கின்றான். இந்த வசனத்தில் அல்லாஹ் இந்த சட்டத்தைக் கூறியுள்ளான்: அதாவது நபி எப்போது வந்தாலும் அவர் மக்களை சீர்திருத்துவதற்காக திட்டங்களை வகுக்கின்றார். அப்போது ஷைத்தான் அவரது வழியில் தடைகளை ஏற்படுத்த துவங்கி விடுகின்றான். ஆனால் அதன் விளைவு எப்படி அமைகின்றது? என்றால் நயவஞ்சகர்கள் மற்றும்

இதன் தொடர்ச்சி. 16-ம் பக்கம் ......

## நபிமொழி

### நன்மையான மற்றும் பயனளிக்கக் கூடிய பொருட்களை இரவலாக கொடுப்பதற்கான நற்கூலி

(2829) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

பாலுக்காக இரவல் வழங்கப்பட்ட, அதிகப் பால் கொடுக்கின்ற ஒட்டகம் தான் (அன்பளிப்பில்) சிறந்ததாகும். அதிகப் பால் கொடுக்கும் ஆடும் (அன்பளிப்பில்) சிறந்ததாகும். அது காலையில் ஒரு பாத்திரம் (நிறையப்) பால் கொடுக்கின்றது. மேலும் மாலையில் ஒரு பாத்திரம் (நிறையப்) பால் கொடுக்கின்றது

(2631)ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நற்பண்புகள் நாற்பது ஆகும். அவற்றில் ஒன்றை, அதன் நன்மையை நாடியும், அதற்கென வாக்களிக்கப்பட்டுள்ள (சொர்க்கத்)தை உண்மையென நம்பியும் ஒருவர் கடைபிடித்து நடப்பாராயின், அதன் காரணத்தால் அவரை அல்லாஹ் சொர்க்கத்தில் நுழைத்தே தீருவான். அவற்றில் மிக உயர்ந்தது பெட்டை வெள்ளாட்டைப் பாலுக்காக இரவல் கொடுப்பதாகும். அறிவிப்பாளர் ஹஸ்ஸான் கூறினார்: பெட்டை வெள்ளாட்டை பாலுக்காக இரவல் கொடுப்பதையடுத்து, அதற்குக் கீழேயுள்ள நல்ல காரியங்களான ஸலாமுக்கு பதில் கூறுவது, தும்மியவருக்காகப் பிரார்த்தனை செய்வது, பாதையில் கிடக்கும் தொல்லை தரும் பொருளை அகற்றுவது ஆகியவற்றை நாம் எண்ணிப் பார்த்தோம். ஆனால், பதினைந்து நற்செயல்களைக் கூட எங்களால் எட்ட முடியவில்லை. (ஸஹீஹ் புகாரீ, கிதாபுல் ஹிபா) தொகுதி 4)

* * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஹ்ஸாப் போரின் போது நிகழ்ந்த சம்பவங்கள்**

மதீனாவின் பெரும் பகுதி அகழ் மூலமாக பாதுகாக்கப்பட்டிருந்தது. மற்றொரு புறம் சில மலைக் குன்றுகளும், சில உறுதியான வீடுகளும், சில தோட்டங்களும் இருந்தன. ஆகவே (காஃபிர்களின்) படையால் திடீர் தாக்குதல் நடத்த முடியாமல் இருந்தது. ஆகவே காஃபிர்கள் ஆலோசனை செய்து ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள். அது என்னவென்றால், மதீனாவில் எஞ்சியிருக்கின்ற யூதர்களின் மூன்றாவது கோத்திரமான பனூ குறைழாவை எவ்வகையிலாவது தம்முடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும், அதன் மூலமாக மதீனா நகரை சென்றடைவதற்கான வழி திறக்கப்பட வேண்டும் என்றும் முடிவெடுத்தார்கள்

பெருமானார் (ஸல்) அவர்களின் உயிர் தியாகிகளாக இருந்த ஸஹாபிகளும் அன்னாரை நேசிக்கக் கூடிய விதம் வினோதமாக இருந்தது. ஸஹாபிகளும் அன்னாரிடம் தம்மை ஒப்படைத்துக் கொண்டே சென்றார்கள். இன்னொரு புறமோ, பெருமானார் (ஸல்) அவர்களோ தம்மை விட அனைவருக்கும் முன்னுரிமை வழங்கிக் கொண்டே சென்றார்கள். எந்த அளவுக்கு துணிவைக் காட்டினார்கள் என்றால், தம் உயிரைப் பற்றி கொஞ்சம் கூட அக்கறை கொள்ளவில்லை; மதீனாவாசிகளைப் பற்றிய அக்கறை (மட்டுமே) இருந்தது. அதற்காக தாமே எல்லா இடங்களிலும் சென்று கண்காணிப்பு பணியை மேற்கொள்வார்கள்

யூ.கே லஜ்னா இமாயில்லாஹ் மற்றும் அன்ஸாருல்லாஹ் இஜ்திமாக்களின் போது ஏற்கனவே அறிவுறுத்தப்பட்ட துஆக்கள் மற்றும் தரூத் ஷரீஃப் ஆகியவற்றை ஓதி வருவதற்கான வழிகாட்டல்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 27 செப்டம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**3** ஆண்டு **தபூக்** மாத**ம் 27 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

அகழ்ப் போர் ஏற்பட்ட சூழ்நிலைகளைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் எடுத்துரைத்துள்ளார்கள் என்று கடந்த குத்பாவில் நான் கூறியிருந்தேன். அதன் விபரத்தை தற்போது கூறுகிறேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

மதீனாவின் பெரும் பகுதி அகழ் மூலமாக பாதுகாக்கப்பட்டிருந்தது. மற்றொரு புறம் சில மலைக் குன்றுகளும், சில உறுதியான வீடுகளும், சில தோட்டங்களும் இருந்தன. ஆகவே (காஃபிர்களின்) படையால் திடீர் தாக்குதல் நடத்த முடியாமல் இருந்தது. ஆகவே காஃபிர்கள் ஆலோசனை செய்து ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள். அது என்னவென்றால், மதீனாவில் எஞ்சியிருக்கின்ற யூதர்களின் மூன்றாவது கோத்திரமான பனூ குறைழாவை எவ்வகையிலாவது தம்முடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும், அதன் மூலமாக மதீனா நகரை சென்றடைவதற்கான வழி திறக்கப்பட வேண்டும் என்றும் முடிவெடுத்தார்கள். நாடு கடத்தப்பட்டிருந்த பனூ நளீர் கோத்திரத்தின் தலைவனான ஹுயய் பின் அக்தபின் சதித் திட்டத்தின் காரணமாக முழு அரேபியாவும் ஒன்றிணைந்து மதீனாவின் மீது தாக்குதல் நடத்த வந்திருந்தது. ஆகவே ஆலோசனைக்குப் பிறகு காஃபிர்களின் படைத் தளபதியான அபூஸுஃப்யான், ஹுயய் பின் அக்தப் -யிடம் பனூ குறைழாவை எவ்வகையிலாவது நம்முடன் இணையச் செய்துவிட வேண்டும் என்று கூறி அவனை அதற்காக நியமித்தார்.

ஆகவே ஹுயய் பின் அக்தப் யூதர்களின் கோட்டைகளை நோக்கி சென்றான். அவன் பனூ குறைழாவுடைய தலைவர்களை சந்திக்க விரும்பினான். ஆரம்பத்தில் அவர்கள் சந்திக்க மறுத்து விட்டனர். இப்போது முழு அரேபியாவும் முஸ்லிம்களை அழிப்பதற்காக வந்துள்ளது. இந்த குடியிருப்பு முழு அரேபியாவையும் எவ்வகையிலும் எதிர்கொள்ள முடியாது. இப்போது முஸ்லிம்களுக்கு எதிராக நிற்கின்ற இந்தப் படை, எழுகின்ற கடல் ஆகும் என்று அவர்களுக்கு புரிய வைத்தான். இவ்விஷயங்களினால் அவன் பனூ குறைழாவை இறுதியில் துரோகம் செய்வதற்கும், ஒப்பந்தத்தை முறிப்பதற்கும் ஒப்புக் கொள்ள செய்து விட்டான். இறுதியில் என்ன தீர்மானிக்கப்பட்டது? என்றால், காஃபிர்களின் படை முன்புறமாக அகழை தாண்டி வருவதற்கு முயற்சி செய்யும் என்றும், அகழை தாண்டுவதில் அவர்களுக்கு வெற்றி கிடைத்து விட்டால், (முஸ்லிம்) பெண்களும், குழந்தைகளும் இருக்கின்ற மதீனாவில் இன்னொரு பகுதியின் மீது பனூ குறைழா தாக்குதல் நடத்த வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

பனூ குறைழாவின் மீது இருந்த நம்பிக்கையின் காரணமாக (முஸ்லிம்) பெண்களும், குழந்தைகளும் பாதுகாக்கப்படாமல் விடப்பட்டிருந்தார்கள். இவ்வாறு அங்கு தாக்குதல் நடத்தப்பட்டால் முஸ்லிம்களின் எதிர்க்கின்ற ஆற்றல் முற்றிலும் நசுக்கப்பட்டுவிடும். மேலும் ஒரே நொடியில் முஸ்லிம் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் அனைவரும் கொல்லப்பட்டு விடுவார்கள். இந்தத் திட்டத்தில் முஸ்லிம்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் ஆகியிருக்கும். (ஏனெனில்) பனூ குறைழா முஸ்லிம்களின் நட்புக் கோத்திரமாக இருந்தது. அவர்கள் முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டு பகிரங்கமாக போரில் கலந்து கொள்ளவில்லை என்றாலும், அவர்கள் இருக்கும் பக்கம் வழியாக மதீனாவின் மீது எவரும் தாக்குதல் நடத்த முடியாது என்று முஸ்லிம்கள் நம்பிக் கொண்டிருந்தனர். ஆகவே அவர்கள் பக்கம் முற்றிலும் பாதுகாப்பு இன்றி விடப்பட்டிருந்தது. பனூ குறைழா காஃபிர்களுடன் சேர்ந்து கொண்ட போது அவர்களும், காஃபிர்களும் இந்த சூழ்நிலையை ஆராய்ந்து பார்த்த பிறகு ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தனர். அது என்னவென்றால், பனூ குறைழா இருக்கின்ற இந்தப் பக்கத்தின் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை முஸ்லிம்கள் செய்து விடக் கூடாது என்பதற்காக பனூ குறைழா பகிரங்கமாக காஃபிர்களுக்கு உதவி செய்ய மாட்டார்கள் என்று முடிவு செய்யப்பட்டது. அவர்கள் மிகவும் சாதுரியமாக செயல்பட்டார்கள். அதாவது, (பனூ குறைழா இருக்கும்) அந்தப் பக்கமாக தாக்குதல் நடத்தப்பட சாத்தியமுள்ளது என்று முஸ்லிம்கள் கருதி விடக் கூடாது என்பதற்காக. இஸ்லாமியப் படையின் மீது காஃபிர்களின் படை கடுமையாக தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கும் போது பனூ குறைழாவின் கோட்டைகள் இருக்கும் பகுதிகளில் முற்றிலும் பாதுகாப்பு இல்லாமல் இருக்கும்போது முஸ்லிம்களை கவனமற்ற நிலையில் வைத்தவாறு பனூ குறைழா எதிரிகளுடன் சேர்ந்து கொண்டது. மிகவும் அபாயகரமான திட்டமாக அது இருந்தது.

இது பாதுகாப்பற்ற நிலையை சாத்தியப்படுத்துவதுடன் தாக்குதலுக்கான அபாயத்தையும் அதிகரித்து விடுகின்றது. எவ்வாறிருப்பினும், இவ்வாறான நிலையில் முஸ்லிம்களுக்கு கவலை ஏற்படுவது இயல்பான விஷயமே! அதை நீக்க முயற்சி செய்வதும் அவசியமாக இருந்தது. ஆகவே மதீனாவின் பாதுகாப்பிற்காக 500 நபர்களைக் கொண்ட படையை நியமிக்க வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் தீர்மானித்தார்கள். இதற்கான விபரத்தை வரலாற்று ஆசிரியர்கள் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

அதாவது பனூ குறைழா

உடன்படிக்கையை முறித்துக் கொண்ட செய்தி முஸ்லிம்கள் வரை வந்தடைந்த போது முஸ்லிம்களின் அச்சம் அதிகரித்து விட்டது. அவர்களுக்கு தமது பெண்களைப் பற்றியும் பிள்ளைகளைப் பற்றியும் கவலை தோன்றியது. முஸ்லிம்களின் நிலை எவ்வாறு இருந்தது? என்றால், அதைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்:

إِذْ جَاءُوكُم مِّن فَوْقِكُمْ وَمِنْ أَسْفَلَ مِنكُمْ
وَإِذْ زَاغَتِ الْأَبْصَارُ وَبَلَغَتِ الْقُلُوبُ الْحَنَاجِرَ
وَتَظُنُّونَ بِاللَّهِ الظُّنُونَا

பொருள்: அவர்கள் உங்களிடம் உங்களுக்கு மேலிருந்தும் (அதாவது மலை வழியாகவும்). உங்களுக்குக் கீழேயிருந்தும் (தரை வழியாகவும்) வந்த நேரத்தையும், (உங்கள்) கண்கள் பதற்றமடைந்த நேரத்தையும், (உங்கள்) இதயங்கள் உங்கள் தொண்டைகளை அடைத்த நேரத்தையும் நீங்கள் அல்லாஹ்வைக் குறித்து சந்தேகமான எண்ணங்களைக் கொண்ட நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்!).

பெருமானார் (ஸல்) அவர்களும், முஸ்லிம்களும் எதிரிக்கு முன்னால் இருந்தார்கள். அவர்கள் அங்கிருந்து நகர முடியாமல் இருந்தார்கள். அவர்கள் அகழுடைய பல்வேறு பகுதிகளை மாறி, மாறி பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள். வரலாற்றாசிரியர்கள் அகழுடைய எட்டு இடங்களை பற்றி குறிப்பிட்டு அவை பாதுகாக்கப்பட்டு வந்தன என்று எழுதி இருக்கிறார்கள். இந்த அனைத்திற்கும் கண்காணிப்பாளராக ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம் (ரலி) அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். பனூ குறைழாவோ இப்போது ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு முற்றுகையிட்டிருந்த (அரேபிய) கோத்திரங்களுடன் இணைந்து விட்டிருந்தது. அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் மதீனாவின் மீது தாக்குதல் நடத்தலாம் என்ற செய்திகள் வந்து கொண்டிருந்தன. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி கிடைத்த போது அன்னார் (ஸல்) ஹஸ்ரத் ஸல்மா பின் அஸ்லம் (ரலி) அவர்களுக்கு 200 படை வீரர்களையும், ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுக்கு 300 படை வீரர்களையும் கொடுத்து மதீனாவை பாதுகாப்பதற்காக அனுப்பி வைத்தார்கள். இரவு நேரங்களில் அவர்கள் பல்வேறு இடங்களில் காவல் பணியில் ஈடுபட்டு இருக்க வேண்டும் என்றும், அவ்வப்போது அல்லாஹு அக்பர் என்று தக்பீர் முழக்கங்களிட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு கூறியிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இதை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

அப்பொழுது மதீனாவின் விடியற்க் காலத்தை வெளிப்படையான காரணிகளைக் கொண்டு பார்க்கும்போது அது முற்றிலும் இருளானதாகத் தென்பட்டது. நகரின் நாலாப் புறமும் இரத்த வெறி பிடித்த ஆயிரக்கணக்கான எதிரிகள் முற்றுகையிட்டு வந்தார்கள். ஏதேனும் சந்தர்ப்பம் கிடைத்தால் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை அழித்து விடலாம் என்று அவர்கள் ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்து காத்திருந்தார்கள். நகரின் ஒரு பகுதியில் முஸ்லிம்களுக்கு துரோகம் இழைத்திருந்த பனூ குறைழா கோத்திரம் இருந்தது. அவர்களுடைய நூற்றுக்கணக்கான ஆயுதமேந்திய இளைஞர்கள் ஒரு பயங்கரமான படையை விட எவ்விதத்திலும் குறைந்தவர்களாக இருக்கவில்லை. அவர்கள் எப்பொழுது விரும்பினாலும் அல்லது எப்பொழுது வாய்ப்பு கிடைத்தாலும் அந்தப் பக்கத்தில் இருந்து முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்த இயலும். நகருக்குள் இருந்த முஸ்லிம் பெண்களும், குழந்தைகளும் எல்லா நேரமும் இவர்களின் இரையாக இருந்தார்கள். அறிவுடைய எவருக்கும் இந்த சூழ்நிலையின் உண்மைத்துவம் மறைவானதாக இருக்கவில்லை. பலவீனமான முஸ்லிம்களிடத்தில் கடும் கவலையும், பதற்றமும் ஏற்பட்டு விட்டது.

நயவஞ்சகத் தன்மை கொண்டவர்கள் பகிரங்கமாகவே

مَّا وَعَدَنَا اللَّهُ وَرَسُولُهُ إِلَّا غُرُورًا

என்று கூற ஆரம்பித்தனர்.

பொருள்: அல்லாஹ்வும், அவனது தூதரும் முஸ்லிம்களின் வெற்றி மற்றும் முன்னேற்றத்தைக் குறித்து பொய்யான வாக்குறுதிகளையே தந்துள்ளனர்.

சில நயவஞ்சகர்கள் பெருமனார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நகரில் எங்களது வீடுகள் முற்றிலும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன. எனவே தாங்கள் அனுமதி வழங்கினால் நாங்கள் எங்கள் வீடுகளில் தங்கி அவற்றை பாதுகாப்போம் என்று கூறினர். இதற்கு பதில் அளிக்கும் வகையில் இறைவனுடைய வஹீ இறங்கியது.

وَمَا هِيَ بِعَوْرَةٍ إِن يُرِيدُونَ إِلَّا فِرَارًا


பொருள்: மேலும் தம் வீடுகள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள் என்பது தவறாகும். மாறாக விஷயம் என்னவெனில், அவர்கள் போர்க் களத்தை விட்டு தப்பியோட வழிவகை தேடுகின்றனர்.

ஆனால், களங்கமற்ற முஸ்லிம்களுடைய ஈமானை வெளிப்படுத்துவதற்குரிய நேரமாகவும் அது இருந்தது.

وَلَمَّا رَأَى الْمُؤْمِنُونَ الْأَحْزَابَ
قَالُوا هَٰذَا مَا وَعَدَنَا اللَّهُ وَرَسُولُهُ
وَصَدَقَ اللَّهُ وَرَسُولُهُ وَمَا زَادَهُمْ
إِلَّا إِيمَانًا وَتَسْلِيمًا

என்று திருக்குர்ஆன் கூறுகிறது. அதாவது, நம்பிக்கை கொண்டவர்கள் காஃபிர்களின் இந்த ஆயுதமேந்திய பெரும் படையை கண்டபோது, அல்லாஹ்வும், அவனது தூதரும் நம்மிடம் வாக்குறுதியளித்தது இதுவேயாகும். அல்லாஹ்வும், தூதரும் முற்றிலும் உண்மையையே கூறினர் என்று கூறினார்கள். ஆகவே இந்த தாக்குதலால் அவர்களின் நம்பிக்கையும், கட்டுப்படுதலும் மேலும் அதிகரித்தது.

ஆனால், (இந்த) இக்கட்டான தருணத்தைக் குறித்தும் அபாயகரமான சூழ்நிலையைக் குறித்தும் அனைவருக்கும் ஒரேபோன்று உணர்வு இருந்தது. இதைக் குறித்து அல்லாஹ் கூறுகின்றான்:




إِذْ جَاءُوكُم مِّن فَوْقِكُمْ وَمِنْ أَسْفَلَ مِنكُمْ
وَإِذْ زَاغَتِ الْأَبْصَارُ وَبَلَغَتِ الْقُلُوبُ الْحَنَاجِرَ
وَتَظُنُّونَ بِاللَّهِ الظُّنُونَا
هُنَالِكَ ابْتُلِيَ الْمُؤْمِنُونَ
وَزُلْزِلُوا زِلْزَالًا شَدِيدًا

காஃபிர்களின் படை உங்களிடம், உங்களுக்கு மேலிருந்தும் (அதாவது மலை வழியாகவும்), உங்களுக்குக் கீழேயிருந்தும் (தரை வழியாகவும்) வந்த நேரத்தையும், (உங்கள்) கண்கள் பதற்றமடைந்த நேரத்தையும், (உங்கள்) இதயங்கள் உங்கள் தொண்டைகளை அடைத்த நேரத்தையும் நீங்கள் அல்லாஹ்வைக் குறித்து சந்தேகமான எண்ணங்களைக் கொண்ட நேரத்தையும் (நினைத்துப் பாருங்கள்)……

அந்த நேரம் உண்மையிலேயே நம்பிக்கை கொண்டவர்களுக்கு கடும் சோதனைக்கான நேரமாக இருந்தது. முஸ்லிம்கள் மீது மிகவும் கடுமையான அதிர்ச்சி ஏற்பட்டிருந்தது. இவ்வாறான அபாயகரமான நேரத்தில் முஸ்லிம்களுடைய சிறிய ஜமாஅத், அதுவும் எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், அவர்களில் சிலர் பலவீனமான இயல்பை உடையவர்களாக இருந்தார்கள் ; சிலர் நயவஞ்சகர்களாகவும் இருந்தனர். அவர்களால் இந்த பெரும்படையை எவ்வாறு எதிர்கொள்ள முடியும்? பலவீனமான பகுதிகளில் விரும்பிய வகையில் கண்காணிப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு கூட போதிய ஆட்கள் அவர்கள் வசம் இல்லை. ஆகவே இரவு, பகல் என்று கடும் டியூட்டி கொடுத்ததன் விளைவாக முஸ்லிம்கள் முற்றிலும் களைப்படைந்து போயிருந்தனர். இன்னொரு புறம், பனூ குறைழாவுடைய துரோகத்தின் காரணமாக (முஸ்லிம்) பெண்களும்,குழந்தைகளும் பாதுகாப்பாக இருக்கும் வகையில் நகரின் தெருக்களில் கண்காணிக்கும் பணியை இன்னும் உறுதிப்படுத்த வேண்டியதும் அவசியமாக இருந்தது. காஃபிர்களின் படை வீரர்கள் எல்லா வகையிலும் முஸ்லிம்களுக்கு தொந்தரவு கொடுக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

சில சமயம் அவர்கள் ஏதேனும் பலவீனமான பகுதியில் தாக்குதல் நடத்துவதற்காக ஒன்று கூடுவார்கள். அப்பொழுது முஸ்லிம்கள் அந்தப் பகுதியை பாதுகாப்பதற்காக ஒன்று கூட ஆரம்பிப்பார்கள். உடனே காஃபிர்கள் தம் போக்கை மாற்றி வேறொரு பகுதியில் அழுத்தம் கொடுக்க ஆரம்பிப்பார்கள். ஒன்றும் செய்ய இயலாத அந்த முஸ்லிம்கள் ஓடியவாறு அந்தப் பகுதியை சென்றடைவார்கள். சில சமயம் காஃபிர்கள் ஒரேநேரத்தில் இரண்டு, மூன்று இடங்களில் தாக்குதல் தொடுப்பதற்காக வந்தடைவார்கள். அதன் காரணமாக முஸ்லிம்களின் கூட்டம் சிதறி பல குழுக்களாக பிரிந்து விடும். சிலசமயம் சூழ்நிலை மிகவும் இக்கட்டான சூழ்நிலையாக மாறி விடும். ஏதேனும் பலவீனமான பகுதியில் இருந்து பயன் அடைந்தவாறு காஃபிர்களின் படை நகர் எல்லைக்குள் நுழைந்து விடும் அளவுக்கு சென்று விடும். அவ்வாறான தாக்குதலை

எதிர்கொள்வதற்காக முஸ்லிம்கள் பொதுவாக அம்புகளை எறிந்து தடுப்பார்கள். ஆனால், சில சமயம் காஃபிர்களின் படை வீரர்கள் என்ன வழிமுறையை மேற்கொள்வார்கள் என்றால், அவர்களின் ஒரு படை பிரிவு முஸ்லிம்கள் மீது அம்புகளை பொழிந்து முஸ்லிம்களை பின்வாங்குமாறு செய்து விடுவார்கள். இன்னொரு படை பிரிவு தாக்குதல் தொடுத்து அகழின் ஏதாவது பலவீனமான பகுதியை கடந்து செல்ல முயற்சிக்கும். இந்த போர்முறை காலை முதல் இரவு வரை நடக்கும். எந்த அளவுக்கு என்றால், சில சமயங்களில் இரவு நேரங்களிலும் இது தொடர்ந்து கொண்டிருக்கும்.

ஒரு சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஃகத்ஃபானுடன் சமாதானம் செய்து கொள்வதை பற்றியும் ஸஹாபிகளிடத்தில் கேட்டார்கள். குறிப்பாக அன்ஸார் சகோதரர்களிடத்தில் கேட்டார்கள் என்று வரலாற்றில் நாம் பார்க்க முடிகிறது. இதன் விபரத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

அந்த நாள் முஸ்லிம்களுக்கு மிகவும் துன்பமான, சிரமம் மிகுந்த, அபாயகரமான நாளாக இருந்தது. இந்த முற்றுகை எந்த அளவு நீண்டதாக ஆகிக் கொண்டே செல்கிறதோ அதே அளவு முஸ்லிம்களின் எதிர்க்கின்ற திறனும் பலவீனமானதாக ஆகிவிடும் என்பது நிச்சயமானது. முஸ்லிம்களின் உள்ளங்கள் ஈமான் மற்றும் களங்கமற்றத் தன்மையால் நிறைந்திருந்தாலும் அவர்களின் உடல்கள் இயற்கைச் சட்டத்தின் கீழ் பலவீனமானதாக ஆகிக் கொண்டே சென்றன. பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த சூழ்நிலையை பார்த்தபோது அன்ஸார் சகோதரர்களின் தலைவர்களான ஸஅது பின் முஆஸ் மற்றும் ஸஅது பின் உபாதா ஆகியோரை அழைத்து அவர்களுக்கு முழு சூழ்நிலையையும் புரிய வைத்து இந்த சூழ்நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும்? என்று ஆலோசனை கேட்டார்கள். அத்துடன், நீங்கள் விரும்பினால் ஃகத்ஃபான் கோத்திரத்திடம் மதீனாவின் வருமானத்திலிருந்து கொஞ்சம் உங்களுக்கு தருகிறோம் என்று கூறி போரை தள்ளிப் போட்டு விடலாம் என்றும் தன் சார்பாக கூறினார்கள். ஸஅது பின் முஆஸ் மற்றும் ஸஅது பின் உபாதா ஆகியோர் ஒருமித்த குரலில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உங்களுக்கு இது தொடர்பாக இறை வஹீ இறங்கி உள்ளது என்றால் தாங்கள் மகிழ்ச்சியுடன் இந்த ஆலோசனைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அவ்வாறன்று; இந்த விவகாரத்தில் எந்த வஹீயும் எனக்கு இறங்கவில்லை. நான் உங்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தைக் கண்டு இதை ஒரு கருத்தாகவே தெரிவித்தேன் என்று கூறினார்கள். இரு ஸஅதுகளும் அதாவது, ஸஅது பின் முஆஸ் மற்றும் ஸஅது பின் உபாதா ஆகியோர் இவ்வாறு பதில் அளித்தார்கள்; அவ்வாறென்றால், எங்களது ஆலோசனை என்னவென்றால், நாங்கள் ஷிர்க்கின் நிலையில் கூட எந்தவோர் எதிரிக்கும் தைரியம் கொடுத்தது கிடையாது. அவ்வாறிருக்கும் போது, இப்பொழுது முஸ்லிம்களாக இருக்கும் நிலையில் எப்படி கொடுக்க முடியும்? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாம் அவர்களுக்கு வாள் வீச்சைத் தவிர வேறு ஒன்றும் கொடுக்க மாட்டோம். இப்பொழுது போர் நடக்கத்தானே செய்கிறது என்று கூறினார்கள். பெருமனார் (ஸல்) அவர்களுக்கு அன்ஸார் ஸஹாபிகளின் காரணமாகவே கவலை இருந்தது. அவர்கள் மதீனாவின் உண்மையான குடிமக்களாக இருந்தார்கள். அநேகமாக அன்னார் (ஸல்) இவ்வாறு ஆலோசனை கேட்டது கூட அன்ஸாரிகளின் மனநிலையை அறிந்து கொள்வதற்காக இருக்கலாம். இந்த சோதனைகளைக் கண்டு அவர்கள் துன்பத்தில் ஆழ்ந்து விட்டார்களா என்று அறிந்து கொள்ள விரும்பியிருக்கலாம். அவர்கள் துன்பத்தில் இருக்கிறார்கள் என்றால், அவர்களை ஊக்குவிக்கலாம் என்று அன்னார் விரும்பி இருக்கலாம். ஆகவே இப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் மகிழ்ச்சியுடன் அவர்களின் இந்த ஆலோசனையை ஒப்புக் கொண்டார்கள். (இவ்வாறு) போர் மேலும் தொடர்ந்தது.

ஏற்கனவே முன்பும் கூறப்பட்டது போன்று அந்த அகழ் ஓர் உறுதியான தடுப்புச் சுவராக பயன்பட்டு வந்த போதிலும் அதன் காரணமாக முஸ்லிம்கள் முழுமையான முறையில் பாதுகாப்பாகவும், அச்சமற்ற நிலையிலும் இருந்தார்கள் என்பது இதன் பொருள் அன்று. ஒருபுறம், நயவஞ்சகர்களும் – குறிப்பாக பனூ குறைழா போன்ற போர் வீரர்களும் மதினாவுக்குள்தான் இருந்தார்கள். ஒப்பந்தத்தை முறித்த பிறகு அவர்கள் ஒரு பயங்கரமான எதிரியைப் போன்று முன்னால் இருந்தார்கள். இன்னொரு புறம், அகழ் தோண்டப்பட்டிருந்த போதிலும் அதில் சில இடங்கள் எவ்வாறு இருந்தனவென்றால் அதன் வழியாக எதிரியின் தாக்குதலுக்கான அபாயம் இருந்தது. அந்தப் பகுதிகளில் எதிரி அகழைக் கடந்து உள்ளே வரக் கூடிய சாத்தியங்கள் இருந்தன. கவலைக்கு ஆளாக்கும் இந்த சூழ்நிலையில் ஆங்காங்கே தொடர்ச்சியாக கண்காணிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. அந்த கண்காணிப்பு பணியில் பெருமானார் (ஸல்) அவர்களும் இருந்தார்கள். அன்னார் (ஸல்) கண்காணித்தும் வந்தார்கள்; அதே நேரத்தில் ஸஹாபிகளுக்கு ஊக்கமளித்தும் வந்தார்கள். இந்த அனைத்து நடவடிக்கைகளும் பகல் பொழுதில் நடந்தன ; இரவிலும் தொடர்ந்தன. மதீனாவின் அந்த இரவுகள் கடும் குளிரான இரவுகளாக இருந்தன. இதைத் தவிர பசியின் கஷ்டங்களும் இருந்தன. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் காவல் பணிக்காக அகழுடைய விளிம்பு வரை செல்வார்கள். அன்னாருக்கு குளிர் துன்பத்தை கொடுக்கும்போது என்னிடத்தில் வருகை தருவார்கள். அன்னாருடைய உடல் சூடானதும் மீண்டும் அகழை நோக்கி புறப்பட்டு விடுவார்கள். எதிரிகள் இந்த பக்கமாக வர முடியும் என்று எனக்கு அச்சமாக உள்ளது என்று கூறிக் கொண்டிருப்பார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருநாள் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) எந்த அளவு களைப்படைந்து போயிருந்தார்கள் என்றால், யாராவது ஒரு நல்லடியார் இன்று இரவு இன்ன இடத்தில் கண்காணிக்கும் பணியை மேற்கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! என்று கூறினார்கள். அன்னார் இதை கூறிக் கொண்டிருக்கும் போது ஆயுதங்களின் ஓசையை கேட்டார்கள். யார் வந்துள்ளார்? என்று வினவினார்கள். அப்போது ஸஅது பின் அபீ வகாஸ் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் ஸஅது ஆவேன்; தங்களின் பாதுகாப்பிற்காக காவல் பணிக்காக வந்துள்ளேன் என்று கூறினார்கள். நீங்கள் இன்ன பகுதிக்கு செல்லுங்கள்; அங்கு அகழின் ஒரு பகுதி பலவீனமாக உள்ளது. அங்கு காவல் பணியை மேற்கொள்ளுங்கள் என்று தம்மை பாதுகாக்க வந்தவரிடம் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் உயிர் தியாகிகளாக இருந்த ஸஹாபிகளும் அன்னாரை நேசிக்கக் கூடிய விதம் வினோதமாக இருந்தது. ஸஹாபிகளும் அன்னாரிடம் தம்மை ஒப்படைத்துக் கொண்டே சென்றார்கள். இன்னொரு புறமோ, பெருமானார் (ஸல்) அவர்களோ தம்மை விட அனைவருக்கும் முன்னுரிமை வழங்கிக் கொண்டே சென்றார்கள். எந்த அளவுக்கு துணிவைக் காட்டினார்கள் என்றால், தம் உயிரைப் பற்றி கொஞ்சம் கூட அக்கறை கொள்ளவில்லை; மதீனாவாசிகளைப் பற்றிய அக்கறை (மட்டுமே) இருந்தது. அதற்காக தாமே எல்லா இடங்களிலும் சென்று கண்காணிப்பு பணியை மேற்கொள்வார்கள். வெளிப்படையில், அவ்வப்போது ஓய்வெடுப்பதற்காக கூடாரத்திற்கு வருவார்கள்தான். ஆனால், அந்த ஓய்வின் பெரும்பாலான நேரத்தை இறைவனுக்கு முன்னால் ஸஜ்தா செய்தவாறு துஆக்களில் கழித்து வந்தார்கள். ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களுடன் அகழ் போரின் போது நான் இருந்தேன். நாங்கள் கடும் குளிரில் இருந்தோம். ஓர் இரவில் நான் அன்னாரைப் பார்த்தேன். அன்னார் (ஸல்) எழுந்து நின்றார்கள். அல்லாஹ் விரும்பிய அளவுக்கு தொழுதார்கள். அதாவது சாத்தியமான அளவுக்கு மிக நீண்ட தொழுகையை தொழுதார்கள். பிறகு கூடாரத்தை விட்டு வெளியே கிளம்பிச் சென்றார்கள். கொஞ்ச நேரம் அங்கே பார்த்துக் கொண்டிருந்தார்கள். இணை வைப்பாளர்களின் குதிரை வீரர்கள் அகழை தாண்டுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள் என்று அன்னார் (ஸல்) கூறத் துவங்கி விடுவார்கள். பிறகு, அப்பாத் பின் பிஷர் அவர்களுக்கு குரல் கொடுத்தார்கள். நான் ஆஜராகி விட்டேன் என்று அவர் கூறினார். உங்களுடன் வேறு யாரேனும் இருக்கின்றார்களா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். என்னுடன் என்னுடைய சில தோழர்கள் இருக்கின்றார்கள் ; மேலும் தங்களுடைய கூடாரத்தை சுற்றிலும் காவல் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள் என்று அவர் கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் நீங்கள் உங்களது தோழர்களை அழைத்துக் கொண்டு செல்லுங்கள். அகழை சுற்றி வாருங்கள்;இணை வைப்பாளர்களின் குதிரை வீரர்கள் அகழை நோட்டமிட்டு கொண்டிருக்கிறார்கள்; நீங்கள் கவனமற்று இருக்கும் நிலையில் உங்கள் மீது தாக்குதல்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

நடத்த வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள் என்று கூறிவிட்டு,

اَللّٰهُمَّ فَادْفَعْ عَنَّا شَرَّهُمْ،
وَانْصُرْنَا عَلَيْهِمْ، وَاغْلِبْهُمْ،
فَلَا يَغْلِبُهُمْ اَحَدٌ غَيْرُكَ

என்று கூறினார்கள்.

பொருள்: அல்லாஹ்வே! எங்களிடமிருந்து அவர்களின் தீங்குகளை அகற்றி விடுவாயாக! அவர்களுக்கெதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக! அவர்களை தோல்வியடைய செய்வாயாக! உன்னைத் தவிர வேறு எவரும் அவர்களை தோல்வியடைய செய்ய இயலாது.

அப்பாத் தம் தோழர்களுடன் புறப்பட்டார்கள். அப்போது அபூ ஸுஃப்யான் பின் ஹர்ப் தம் கூட்டாளிகளுடன் அகழுடைய குறுகலான பகுதியை நோட்டமிட்டுக் கொண்டிருந்தார். முஸ்லிம்களுக்கு அவர்களைப் பற்றி தெரிய வந்தபோது கற்களையும், அம்புகளையும் அவர்கள் மீது எறிந்தார்கள். அதன் காரணமாக அவர்கள் தம் இடங்களை விட்டு திரும்பி சென்று விட்டார்கள். அதாவது, எதிரிகள் அங்கிருந்து திரும்பிவிட்டார்கள். ஹஸ்ரத் அப்பாத் கூறுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களிடம் நான் திரும்பி வந்த போது அன்னார் (ஸல்) தொழுவதை நான் கண்டேன். நான் அன்னாருக்கு தகவல் அளித்தேன்.

ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்கள் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக! அவர்கள் அனைத்து ஸஹாபிகளை விடவும் அதிகமாக பெருமானார் (ஸல்) அவர்களின் கூடாரத்திற்கு அருகில் இருக்கக் கூடியவர்கள் ஆவர். எப்பொழுதும் அன்னாரை பாதுகாக்கும் பணியை செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்களின் துணிவும், முஸ்லிம்களின் நலம் நாடிய விதமும் எவ்வாறானதாக இருந்தது என்றால், குளிரில் இரவு நேரத்தில் அன்னார் (ஸல்) அவ்வப்போது, எழுந்து சென்று அகழை கண்காணித்து வருவார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அன்னார் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டு களைப்படைந்து விடும் போது, குளிரில் துவண்டு விடும்போது, கொஞ்ச நேரத்திற்கு மட்டும் திரும்பி வந்து போர்வையை சுற்றி படுப்பார்கள். உடல் சூடான உடனேயே மீண்டும் அகழை பாதுகாப்பதற்காக சென்று விடுவார்கள். இவ்வாறு தொடர்ச்சியாக விழித்திருந்ததன் காரணமாக அன்னார் (ஸல்) ஒருநாள் முற்றிலும் களைப்படைந்து போய்விட்டார்கள். இப்போது யாரேனும் ஒரு களங்கமற்ற முஸ்லிம் இருந்திருந்தால் நான் தூங்கி இருப்பேனே! என்று அந்த இரவு நேரத்தில் கூறினார்கள். அப்போது வெளியே ஸஅது பின் வகாஸ் (ரலி) அவர்களின் குரல் கேட்டது. ஏன் வந்துள்ளீர்கள்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு, அவர் தங்களின் பாதுகாப்பு பணிக்காக வந்துள்ளேன் என்று கூறினார். என்னுடைய பாதுகாப்பு தேவையில்லை. தற்போது நீங்கள் இன்ன இடத்திற்கு செல்லுங்கள் ;அங்கு அகழுடைய விளிம்பு உடைந்து போய் உள்ளது. அதை பாதுகாத்து வாருங்கள்; அதன் மூலமாக முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று கூறினார்கள். ஆகவே ஸஅது (ரலி) அவர்கள் அந்த இடத்திற்கு காவல் பணிக்காக சென்று விட்டார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் உறங்கினார்கள்.

ஓரிடத்தில் இதைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; பெருமானார் (ஸல்) அவர்கள் ஆரம்ப காலத்தில் மதீனா சென்றடைந்திருந்த காலகட்டத்தில் அபாயம் அதிகரித்து இருந்தது. அப்போதும் ஸஅது அவர்கள் காவல் பணிக்காக வருகை தருவார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்நாட்களில் ஒரு நாளில் சில மக்களுடைய ஆயுதங்களின் ஓசையைக் கேட்டபோது யார்? என்று வினவினார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்களே! நான்தான் வந்துள்ளேன் என்று அப்பாத் பின் பஷீர்(ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அப்பாத் பின் பஷீர் என்று எழுதி இருக்கின்றார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியதன் காரணமாக அன்வாருல் உலூம் உடைய தொகுதி 20-ல் அப்பாத் பின் பஷீர் என்ற பெயர்தான் எழுதப்பட்டுள்ளது. இது எழுதும் போது நிகழ்ந்த தவறாக தெரிகிறது. அன்வாருல் உலூமில் உள்ள அந்த சொற்றொடர் ஸீரத்துல் ஹல்பியாவிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஸீரத்துல் ஹல்பியாவில் அவர்களின் பெயர் அப்பாத் பின் பிஷ்ர் என்று எழுதப்பட்டுள்ளது. இந்த விளக்கத்தை இங்கு நான் ஏன் கொடுக்கிறேன்? என்றால், சில மக்கள் பிறகு எனக்கு எழுத ஆரம்பித்து விடுகிறார்கள். இந்த இடத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; ஆனால், தாங்கள் இவ்வாறு கூறினீர்கள்; அசல் விஷயம் என்ன? என்று கேட்டு எழுதுகின்றார்கள். ஆகவே, எவ்வாறிருப்பினும் அப்பாத் பின் பிஷ்ர் என்பது அசல் பெயராகும். ஒருவேளை அந்தப் பெயர் தவறாக எழுதப்பட்டிருக்கலாம். எழுதும் போதும் தவறாக எழுதப்பட்டிருக்கலாம் அல்லது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தவறுதலாக அந்த பெயரை கூறியிருக்கலாம். எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் தான் வந்துள்ளேன் என்று அப்பாத் பின் பஷீர் அவர்கள் கூறினார்கள். அதாவது, அப்பாத் பின் பிஷ்ர் அவர்கள் கூறினார்கள். உங்களுடன் வேறு யாரேனும் உள்ளார்களா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு அப்பாத் (ரலி) அவர்கள், ஸஹாபிகளின் ஒரு கூட்டம் என்னுடன் உள்ளது; அவர்கள் தங்கள் கூடாரத்தை காவல் காப்பதற்காக வந்துள்ளனர் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், தற்போது இணை வைப்பாளர்கள் அகழை தாண்டுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள்; அங்கு செல்லுங்கள்; அவர்களை எதிர்கொள்ளுங்கள். என் கூடாரத்தை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள்.

இந்தப் போரின் போது ஹஸ்ரத் ஸஃபிய்யா அவர்களின் வீரச் செயல் குறித்த சம்பவமும் காணக் கிடைக்கிறது. அதைப் பற்றிய விபரத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. பெருமானார் (ஸல்) அவர்களின் பரிசுத்த மனைவிமார்களும், அன்னாரின் மாமி ஸஃபிய்யா பின்த் அப்தில் முத்தலிப் அவர்களும் பிற பெண்களுடன் ஒரு கோட்டைக்குள் இருந்தார்கள். அது ஃபாரிஃக் என்று அழைக்கப்படுகிறது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்களின் மனைவிமார்களும், அன்னாரின் மாமியும், அன்னாருடைய உறவினர்களும், அன்னாருடைய வீட்டுப் பெண்களும் அந்த கோட்டையில் இருந்தார்கள். அதற்கு கண்காணிப்பாளராக ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்கள் இருந்தார்கள். பனூ குறைழா உடன்படிக்கையை முறித்துக் கொண்டதாக அறிவித்த போது, அங்குள்ள யூதர்களும் ஏதேனும் வகையில் முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த முயற்சி செய்து கொண்டிருந்தனர். பெருமானார் (ஸல்) அவர்களின் மாமி ஹஸ்ரத் ஸஃபியா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு முறை யூதர்கள் 10 பேர் வந்தார்கள்.அவர்கள் எங்களுடைய கோட்டைக்கு அருகில் சுற்றிக் கொண்டிருந்தார்கள். எவ்வாறு இந்த கோட்டைக்குள் நுழைவது? என்று அவர்கள் சந்தர்ப்பத்தை தேடிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஓர் யூதன் கோட்டையின் மதில் சுவருக்கு மிக அருகில் வந்து விட்டான். நான் அவனை பார்த்துக் கொண்டிருந்தேன். நான் ஹஸ்ஸானிடம், ஹஸ்ஸானே! அங்கு சென்று அந்த யூதனை எதிர்கொள்ளுங்கள் என்று கூறியபோது, அப்துல் முத்தலிபின் மகளே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அவ்வாறான நபர் கிடையாது என்று உங்களுக்கு தெரியும். என்னிடத்தில் தைரியம் இருந்திருக்கும் என்றால் நான் பெருமானார் (ஸல்) அவர்களுடன் சென்றிருப்பேன் என்று கூறினார். ஹஸ்ஸான் இவ்வாறு கூறிய போது, நான் அங்கிருந்து ஒரு மரக்கம்பை எடுத்துக் கொண்டு கோட்டையிலிருந்து இறங்கினேன். சுற்றிக் கொண்டிருந்த அவனுடைய தலையில் அந்த கம்பை கொண்டு எந்த அளவு வேகமாக அடித்தேன் என்றால், அவன் தலையை உடைத்து விட்டேன். அவன் அங்கேயே விழுந்து விட்டான். நான் திரும்பி வந்து ஹஸ்ஸானிடம், இப்பொழுது கீழே இறங்கி சென்று அவனுடைய பொருட்களை எடுத்து வாருங்கள் என்று கூறினேன். அதாவது, அவனிடம் என்னவெல்லாம் உள்ளதோ அதை போர்ச் செல்வமாக நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு ஹஸ்ஸான், அப்துல் முத்தலிபின் மகளே! எனக்கு அவனுடைய பொருட்களின் தேவை கிடையாது என்று கூறினார். அப்படி என்றால் அவனுடைய தலையை வெட்டி யூதர்கள் மீது எறிந்து விடுங்கள்; அதன் காரணமாக அவர்கள் பயந்து விட வேண்டும் ; மீண்டும் இந்த திசையை நோக்கி அவர்கள் வரக் கூடாது என்று நான் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் என்னிடத்தில், இந்த அளவு தைரியம் இல்லை என்று கூறினார்கள்.

ஆகவே, ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள், அவனுடைய தலையை வெட்டி யூதர்களின் பக்கமாக எறிந்து விட்டார்கள். அதாவது தாமே சென்று அவனுடைய தலையை வெட்டி மதிலுக்கு அப்பால் எறிந்து விட்டார்கள். அதைக் கண்டு யூதர்கள் அச்சமடைந்து விட்டார்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் தம் பெண்களை தனியாக விட மாட்டார்கள் என்று எங்களுக்கு தெரியும். நிச்சயமாக அவர்களுடன் பாதுகாவலர்கள் இருக்கிறார்கள் என்று கூறிவிட்டு அவர்கள் அங்கிருந்து ஓடி விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி கிடைத்த போது போர் செல்வத்தில் ஆண்களுக்கு எந்த அளவுக்கு நிர்ணயித்து வைத்திருந்தார்களோ அதே அளவு ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களுக்காகவும் நிர்ணயித்தார்கள்.

ஸீரத்துல் காத்தமுன் நபிய்யீனில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இதைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்: நகருக்குள் இருந்த பெண்கள் மற்றும் குழந்தைகளின் நிலை

எவ்வாறானதாக இருந்தது? என்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் இவர்களை பொதுவாக நகரின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்திருந்தார்கள். அது ஓரளவுக்கு கோட்டையைப் போன்றதாக இருந்தது. ஆனால், அவர்களை கவனிக்கவும், அவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கும் போதுமான அளவு முஸ்லிம்களை நியமிக்க முடியாமல் இருந்தார்கள். ஏனெனில், குறிப்பாக போர்க்களத்தில் எதிரியுடைய தாக்குதல்கள் மிக அதிகமாக இருக்கக் கூடிய அந்நேரத்தில் முஸ்லிம் பெண்களும், குழந்தைகளும் ஏறக்குறைய பாதுகாப்பற்ற நிலையில் இருந்தார்கள். அவர்களைப் பாதுகாப்பதற்காக போர்க் களத்தில் செல்வதற்கு தகுதி வாய்ந்த ஆண்கள் நியமிக்கப்பட்டு வந்தார்கள். ஆகவே இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் இருந்து பயனடைந்தவாறு (முஸ்லிம்) பெண்களும், குழந்தைகளும் ஒன்று கூடி இருந்த அந்தப் பகுதியை தாக்குவதற்காக யூதர்கள் திட்டம் வகுத்தனர். உளவறிந்து வருவதற்காக அவர்கள் தம் சார்பாக ஒருவனை அந்தப் பகுதியை நோக்கி முன்னால் அனுப்பி வைத்தார்கள். அந்நேரத்தில் தற்செயலாக பெண்களுக்கு அருகில் ஒரேயொரு ஸஹாபி மட்டுமே எஞ்சி இருந்தார். அவர் ஹஸ்ஸான் பின் ஸாபித் ஆவார். அவர் மனதளவில் மிகவும் பலவீனமானவராக இருந்ததன் காரணமாக போர்க் களத்தில் செல்வதற்கு தகுதியற்றவராக இருந்தார். அந்த யூத எதிரி சந்தேகத்திற்குரிய இந்த சூழலில் தங்களது குடியிருப்பை சுற்றி வருவதை பெண்கள் பார்த்த போது, பெருமானார் (ஸல்) அவர்களின் மாமியான ஸஃபியா பின்த் அப்தில் முத்தலிப் அவர்கள் ஹஸ்ஸான் அவர்களிடம் சென்று, இந்த நபர் யூத எதிரியாவான். உளவறிந்து வருவதற்காகவும், விஷமம் செய்வதற்காகவும் இங்கு சுற்றிக் கொண்டிருக்கின்றான். அவனைக் கொன்று விடுங்கள். அவன் திரும்பிச் சென்று ஏதேனும் குழப்பத்திற்கு வழி வகுக்காமல் இருக்க வேண்டும் என்று கூறினார்கள். ஆனால், ஹஸ்ஸான் பின் ஸாபித் அவர்களுக்கு அதற்கான தைரியம் இருக்கவில்லை. ஆகவே ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) தாமே முன்னால் சென்று அந்த யூதனை எதிர் கொண்டார்கள். அவனை அடித்து வீழ்த்தினார்கள். பிறகு ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் ஆலோசனையின் அடிப்படையிலேயே அந்த யூத உளவாளியின் தலை வெட்டப்பட்டு யூதர்கள் ஒன்று கூடி இருந்த அந்த திசையை நோக்கி எறியப்பட்டது. அதன் காரணமாக யூதர்களுக்கு முஸ்லிம் பெண்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தைரியம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகவும், முஸ்லிம் பெண்களின் பாதுகாப்பிற்காக அந்த இடத்தில் போதுமான ஆண்கள் இருக்கின்றார்கள் என்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்யப்பட்டது. ஆகவே அந்த திட்டம் பலித்தது. அந்த சந்தர்ப்பத்தில் யூதர்கள் அச்சமடைந்து திரும்பிச் சென்று விட்டனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இச்சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்: ஏதேனும் சந்தர்ப்பம் கிடைத்தால் முஸ்லிம்களுக்கு சந்தேகமில்லாத வகையில் மதீனாவுக்குள் நுழைந்து பெண்களையும், குழந்தைகளையும் கொன்று விடலாம் என்று பனூ குறைழா எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். ஆகவே பெண்களும், குழந்தைகளும் தனியாக இருக்கின்றார்களா அல்லது போதுமான அளவு படை வீரர்கள் அவர்களின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ளனரா? என்று அறிந்து வருவதற்காக ஒருநாள் பனூ குறைழா ஓர் உளவாளியை அனுப்பி வைத்தது. எதிரியிடம் இருந்து அதிக ஆபத்துக்கான அச்சம் இருந்ததனால் பெருமானார் (ஸல்) அவர்களின் குடும்பத்தினர் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். அதற்கு அருகில் அந்த உளவாளி சுற்றிக் கொண்டிருந்தான். முஸ்லிம் படை வீரர்கள் அக்கம் பக்கத்தில் மறைந்திருக்கின்றார்களா? என்று நாலாப்புறமும் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் அந்த இடத்தில் இருந்தபோது பெருமானார் (ஸல்) அவர்களின் மாமியான ஹஸ்ரத் ஸஃபியா (ரலி) அவர்கள் அவனை பார்த்து விட்டார்கள். தற்செயலாக அந்நேரத்தில் அங்கு ஒரே ஒரு முஸ்லிம் ஆண் மட்டுமே இருந்தார். அவரும் நோயாளியாக இருந்தார். அவரிடம் இந்த நபர் வெகுநேரமாக பெண்கள் பகுதியில் சுற்றிக் கொண்டிருக்கின்றான்: அவன் இங்கிருந்து செல்வதாக தெரியவில்லை.நாலாப்புறமும் நோட்டமிட்டுக் கொண்டிருக்கின்றான். ஆகவே நிச்சயமாக இவன் உளவாளியாக தெரிகின்றான். எதிரி முழு சூழ்நிலையையும் அறிந்து கொண்டு இங்கு தாக்குதல் நடத்த வருவதற்கு முன்னர் நீங்கள் அவனை எதிர் கொள்ளுங்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அந்த நோய்வாய்ப்பட்ட ஸஹாபியோ அவ்வாறு செய்ய மறுத்து விட்டார். அப்போது ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள் ஒரு பெரிய மூங்கில் கம்பை எடுத்துக் கொண்டு அந்த நபரை எதிர் கொண்டார்கள். மற்ற பெண்களின் உதவியுடன் அவனை கொல்வதில் வெற்றி பெற்று விட்டார்கள். இறுதியில் ஆராய்ந்து பார்த்த போது, அவன் யூதன் என்று தெரிய வந்தது. பனூ குறைழா உடைய உளவாளியாக அவன் இருந்தான். இதனால் முஸ்லிம்கள் இன்னும் அதிகமாக பயந்து போனர்கள்; மதீனாவின் இப்பகுதியும் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகக் கருதினார்கள். ஆனால், முன் பக்கமோ எதிரியின் தாக்குதல் எந்த அளவு ஆக்ரோஷமாக இருந்தது என்றால், முஸ்லிம் பெண்கள் இருந்த இப்பகுதியை பாதுகாப்பதற்கு எவ்வித ஏற்பாடும் செய்ய முடியாமல் இருந்தார்கள். ஆனால், அவ்வாறிருந்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் பெண்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கியவாறு 1200 படை வீரர்களில் இருந்து 500 படை வீரர்களை பெண்களின் பாதுகாப்பிற்காக நகருக்குள் நியமித்தார்கள். (இப்போது) அகழுடைய பாதுகாப்பிற்காகவும், 18000, 20000 எண்ணிக்கையில் இருந்த எதிரியை எதிர்கொள்வதற்காகவும் 700 படைவீரர்கள் மட்டுமே எஞ்சி இருந்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அமர் பின் அப்தே உத் ஆமிரீ என்பவனை கொன்ற சம்பவமும் காணக் கிடைக்கிறது. அதனுடைய விவரம் என்னவென்றால், காஃபிர்களின் படை மதீனாவை முற்றுகையிட்டிருந்த நேரத்தில், அனைவரும் இணைந்து தாக்குதல் நடத்த வேண்டும் என்று காஃபிர்களின் தலைவர்கள் முடிவெடுத்தார்கள். ஆகவே அவர்கள் குறுகலான அகழ் பகுதியை தேட ஆரம்பித்தார்கள். அந்த வழியாக தம் குதிரை வீரர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய ஸஹாபிகள் வரை சென்றடைய வைக்க விரும்பினார்கள். இறுதியில் அவர்கள் அவ்வாறான ஒரு குறுகிய இடத்தை கண்டறிந்தார்கள். முஸ்லிம்கள் அதைப் பற்றி அறியாதவர்களாக இருந்தார்கள். இக்ரிமா பின் அபூஜஹல், நவ்ஃபல் பின் அப்தில்லாஹ், ஸிரார் பின் கத்தாப், ஹுபைரா பின் அபூ வஹப் மற்றும் அம்ர் பின் அப்தே உத் ஆகியோர் அந்த வழியாக அகழை தாண்டிச் சென்று விட்டார்கள். அம்ர் பின் அப்தே உத் எப்படிப்பட்ட வீரனாக இருந்தான் என்றால், அரபு நாட்டில் ஓராயிரம் வீரர்களுக்கு சமமானவனாக கருதப்பட்டான். இவன் பத்ர் போரில் காயமடைந்திருந்தான். அந்த காயங்களின் காரணமாகவே உஹது போரில் அவனால் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. முஹம்மது (ஸல்) அவர்களை நவூதுபில்லாஹ். கொலை செய்யாத வரை தாம் ஓயப்போவதில்லை என்று அவன் சபதமெடுத்திருந்தான். அவன் மிகவும் ஆணவமான தொனியில், சொர்க்கத்தை நாடக் கூடியவர்களே! என்று குரல் கொடுத்தான். அதாவது அகழைத் தாண்டிச் சென்று அவன் இவ்வாறு உரத்த குரலில் முழக்கமிட்டவாறு முஸ்லிம்களுக்கு சவால் விடுத்தான். சொர்க்கத்தை விரும்பக் கூடியவர்களே! இங்கே வாருங்கள்; நான் உங்களை சொர்க்கத்திற்கு அனுப்பி வைக்கின்றேன் ; நீங்கள் என்னை நரகத்திற்கு அனுப்பி வையுங்கள் என்று கூறினான். அவனுக்கு எதிராக யாரும் நிற்காத போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எழ விரும்பினார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், முன்னால் நிற்பது அம்ர் பின் அப்தே உத் என்று கூறி அவர்களை அமர செய்து விட்டார்கள். ஆனால், அவன் இரண்டாம் முறையோ அல்லது மூன்றாம் முறையோ குரல் கொடுத்த போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை தடுக்கவில்லை. அன்னார் தம்முடைய தலைப்பாகையை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் தலையில் வைத்தார்கள். மேலும் தம்முடைய வாளைக் கொடுத்தார்கள். துஆ செய்தவாறு அவர்களை சண்டைக்கு அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் முன்னேறிச் சென்று அம்ரை பார்த்து, குறைஷியர்களில் எவராவது உம்மிடம் இரண்டு விஷயங்களை எடுத்து வைத்தால் அவற்றில் ஒன்றை நிச்சயமாக நீர் ஏற்றுக் கொள்வதாக உறுதி கொண்டிருப்பதாக நான் கேள்விப்பட்டேன் என்று கூறினார்கள். அதற்கு அம்ர், ஆம்! என்றான். அப்படி என்றால் நான் உம்மிடம் கூற போகின்ற முதல் விஷயம், நீ முஸ்லிமாகி விடு; பெருமானார் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டு இறை அருட்களுக்கு வாரிசு ஆகிவிடு! என்று கூறினார்கள். இது நடக்காது என்று அம்ர் கூறினான். இந்த விஷயத்தை அவன் ஒப்புக் கொள்ளவில்லை என்றால் பிறகு என்னுடன் சண்டையிடுவதற்கு தயாரகி விடு! என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். அதைக் கேட்டு அம்ர் சிரிக்க ஆரம்பித்தான். என்னிடம் ஒருவர் இச்சொற்களை கூறுவார் என்று நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை என்று கூறிவிட்டு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் பெயரைக் குறித்தும், பரம்பரையைக் குறித்தும் கேட்டான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பதிலளித்தப் பிறகு, உம் தந்தை என் நண்பராக இருந்தார். ஆகவே, நீ சென்று விடு; யாரேனும் ஒரு பெரிய நபரை அனுப்பி வை

என்று கூறினான். அத்துடன், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பார்த்து, சகோதரரின் மகனே, நீ இப்போது குழந்தை ஆவாய் ; நான் உன் ரத்தத்தை சிந்த வைக்க விரும்பவில்லை. உங்களில் பெரியவர் ஒருவரை அனுப்பி வை என்று கூறினான். அதற்கு, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் நீ எனது ரத்தத்தை சிந்த வைக்க விரும்பவில்லை என்றால் பரவாயில்லை ; ஆனால், உமது ரத்தத்தை சிந்த வைப்பதில் எனக்கு எந்த தயக்கமும் இல்லை என்று கூறினார்கள். இதைக் கேட்ட அம்ர் ஆவேசத்தில் குருடனாகி தம் குதிரையிலிருந்து கீழே குதித்தான். அதன் கால்களை வெட்டி அதனை கீழே வீழ்த்தினான். குதிரையை கொன்ற பிறகு, அவன் சண்டைக்கு வந்தான். அவன் நெருப்பு ஜுவாலையைப் போன்று, பித்து பிடித்தவனைப் போன்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை நோக்கி முன்னேறினான். எந்த அளவு வேகமாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மீது வாளை வீசினான் என்றால், ஹஸ்ரத அலீ (ரலி) அவர்களின் கேடயத்தை உடைத்தவாறு அவர்களின் நெற்றியில் அது பட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு அது ஓரளவுக்கு காயத்தையும் ஏற்படுத்தியது. ஆனால், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களோ அத்துடன் அல்லாஹு அக்பர் என்று முழக்கமிட்டவாறு வாளைக் கொண்டு அவனை எவ்வாறு தாக்கினார்கள் என்றால், அந்த எதிரி தன்னை காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போய்விட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் வாள் அவனுடைய புஜத்தை வெட்டியவாறு கீழே வரை சென்றடைந்து விட்டது. அம்ர் துடிதுடித்தவாறு உயிரை விட்டான். சில அறிவிப்புகளில், இரண்டு விஷயங்களுக்கு பதிலாக மூன்றில் ஒரு விஷயத்தை கண்டிப்பாக ஏற்றுக் கொள்வாய் என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கேட்டதாக தெரிகிறது. முதல் விஷயம் என்னவென்றால், நீ திரும்பி சென்று விடு! என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனிடம் கூறினார்கள். அவ்வாறு நடக்காது என்று அவன் அன்னாரிடம் கூறினான். அப்படியென்றால், முஸ்லிமாக ஆகிவிடு! என்று கூறினார்கள். பிறகு மூன்றாவது விஷயம் என்னவென்றால், சண்டைக்கு வா என்று அழைத்தார்கள். அம்ர் கொல்லப்பட்டதை கண்டு அவனுடைய மற்ற தோழர்கள் மிரண்டு போய் தம் குதிரைகளில் ஏறி ஓடிவிட்டார்கள். ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள், அவர்களை விரட்டிச் சென்றார்கள். நவ்ஃபல் பின் அப்தில்லாஹ்வை கொன்று வீழ்த்தினார்கள். அதேபோன்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் சகோதரியான உம்மு ஹானிக்கு கணவனாக இருந்த ஹுபைரா பின் அபூ வஹப் மீது வாளைக் கொண்டு எவ்வாறு தாக்கினார்கள் என்றால், குதிரையின் கழுத்து எலும்பு வெட்டப்பட்டது என்று வருகிறது. இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில், அம்ர் கொல்லப்பட்ட பிறகு ஹுபைரா மற்றும் ஸிரார் பின் கத்தாப் ஆகியோர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்றும், ஆனால், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பதில் தாக்குதல் நடத்திய போது, இவ்விரண்டு பேரும் ஓடிவிட்டார்கள் என்றும் வருகிறது. எந்த அளவுக்கென்றால், ஹுபைரா தன் கவசத்தை விட்டு விட்டு ஓடிவிட்டதாக கூறப்படுகிறது. ஆனால், ஹுபைரா குறைஷியர்களின் மிகச் சிறந்த குதிரை வீரனாக கருதப்பட்டு வந்தான்.

ஸிரார் பின் கத்தாப் என்பவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரர் ஆவார். அன்னாரைக் குறித்து ஓர் அறிவிப்பில் வருகிறது; அவர் ஓடிச் சென்ற போது உமர் (ரலி) அவர்கள், அவரை விரட்டிச் சென்றார்கள். ஸிரார் திடீரென்று திரும்பி நின்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது ஈட்டியை கொண்டு தாக்குதல் நடத்த இருந்தார். ஆனால், அவ்வாறு தாக்குதல் நடத்தாமல் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பார்த்து, உமரே! நான் உங்கள் மீது செய்த இந்த உபகாரத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; நான் உங்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) போன்றோர் இவ்வாறான உபகாரத்தை நினைவில் வைத்துக் கொள்வார்களா என்ன? ஸிரார் அப்படி என்னதான் உபகாரம் செய்து விட்டார்; ஆனால், உண்மை என்னவென்றால், அல்லாஹ் ஸிராரின் மீது அருள் புரிந்தான். அது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் துஆவின் விளைவாகவே நிகழ்ந்தது என்றும் கூறலாம். அது என்னவென்றால், இறுதியில் மக்கா வெற்றியின் போது அதே ஸிரார் பின் கத்தாப் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். பிறகு, இஸ்லாமிய போர்களில் முழுமையாக பங்கெடுத்து நன்கு வீரத்துடன் போரிட்டார். யமாமா போரில் அவர்கள் ஷஹீத் ஆனார்கள். சிலரைப் பொருத்த வரை அவர்கள் ஷஹீதாகவில்லை. மாறாக, நீண்ட காலம் வரை உயிர் வாழ்ந்தார்கள் என்றும், இஸ்லாத்தில்தான் மரணமடைந்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

அம்ர் பின் அப்தே உத் கொல்லப்பட்ட பிறகு பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் காஃபிர்கள் தூது செய்தி அனுப்பி, அவனுடைய உடலை பத்தாயிரம் திர்ஹம்களுக்கு வாங்கிக் கொள்வதாக கூறினார்கள். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களோ அதை கொண்டு செல்லுங்கள்; நாம் சடலத்தின் விலையை உண்பதில்லை என்று கூறினார்கள். சில அறிவிப்புகளின் அடிப்படையில் நவ்ஃப்ல் பின் அப்தில்லாஹ் இன்னொரு சந்தர்ப்பத்தில் கொல்லப்பட்டதாக வருகிறது. அதனுடைய விபரம் என்னவென்றால், ஒரு நாள் அவன் தன் குதிரையில் அமர்ந்து அகழை தாண்ட முயற்சி செய்தான். ஆனால், குதிரையால் அகழை தாண்ட முடியவில்லை. அது தம் சவாரியுடன் அகழுக்குள் விழுந்து விட்டது. அதன் மூலமாக அல்லாஹ் அவனை அழித்தான். ஏனெனில், அகழில் விழுந்ததன் காரணமாக அவனது கழுத்தெலும்பு உடைந்து விட்டது. இணை வைப்பாளர்கள் அவனுடைய சடலத்தை வாங்குவதற்காக தம் குழுவை அனுப்பி வைத்தார்கள். அந்த சடலத்திற்கான விலையை கொடுப்பதாக அவர்கள் கூறினர். ஆனால், அதற்கு அவசியம் இல்லை ; அவனை அடக்கம் செய்வதிலிருந்து நாங்கள் உங்களை தடுக்க மாட்டோம் என்று கூறிவிட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் நவ்ஃப்ல் கொல்லப்பட்ட சம்பவத்தையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: எதிரி அகழ்ப் போரில் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தான். சில சமயங்களில் எதிரிகள் அதை தாண்டுவதிலும் வெற்றி பெற்று விடுவார்கள். ஒருநாள் காஃபிர்களின் சில பெரும் தலைவர்கள் அகழைத் தாண்டி வருவதில் வெற்றி பெற்றுவிட்டனர். ஆனால், முஸ்லிம்கள் அவர்கள் மீது எப்படிப்பட்ட கடுமையான தாக்குதலை நடத்தினார்கள் என்றால் திரும்பிச் செல்வதை தவிர அவர்களுக்கு வேறு எந்த வழியும் எஞ்சியிருக்கவில்லை. ஆகவே அந்நேரத்தில் அவர்கள் அகழைத் தாண்டும் போது காஃபிர்களின் மிகப் பெரிய தலைவனான நவ்ஃபல் என்பவன் கொல்லப்பட்டு விட்டான். அவன் எந்த அளவு பெரிய தலைவன் என்றால் அவனுடைய உடல் அவமதிக்கப்பட்டால் முழு அரேபியாவிலும் நாம் முகம் காட்ட முடியாமல் போய் விடுவோம் என்று காஃபிர்கள் கருதினர். ஆகவே அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில், தாங்கள் இந்த சடலத்தை திருப்பிக் கொடுத்து விடுங்கள். நாங்கள் பத்தாயிரம் திர்ஹம் தங்களுக்கு தருவதற்கு தயாராக இருக்கின்றோம் என்று செய்தி அனுப்பினார்கள். எவ்வாறு நாம் முஸ்லிம் தலைவர்களின் சடலங்களை சிதைத்திருக்கின்றோமே; இன்னும் கூறுவதென்றால் பெருமானார் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையின் மூக்கையும், காதுகளையும் உஹது போரின் போது அவர்கள் வெட்டியிருக்கின்றோமே ; எனவே அதே போன்று அநேகமாக இன்று முஸ்லிம்கள் நம்முடைய இந்த தலைவருடைய மூக்கையும், காதுகளையும் வெட்டி நம் சமுதாயத்தை இழிவுபடுத்தி விடுவார்கள் என்று அவர்கள் நினைத்துக் கொண்டனர். ஆனால், இஸ்லாமிய கட்டளையோ முற்றிலும் வேறு மாதிரியாக இருந்தது. சடலங்களை அவமதிப்பதற்கு இஸ்லாம் அனுமதி கொடுப்பதில்லை. காஃபிர்களின் தூது செய்தி பெருமானார் (ஸல்) அவர்களை அடைந்த போது, இந்த சடலத்தை நாம் என்ன செய்யப் போகிறோம்? இந்த சடலம் நமக்கு எவ்வகையில் உதவப் போகிறது? இதற்குப் பதிலாக நாங்கள் உங்களிடமிருந்து எந்த விலையையும் கேட்க மாட்டோம். உங்களுடைய சடலத்தை நீங்கள் கொண்டு செல்லுங்கள்; எங்களுக்கு அதனுடன் எந்த தொடர்பும் கிடையாது என்று கூறிவிட்டார்கள்.

எவ்வாறிருப்பினும், இதன் கூடுதல் விவரங்கள் இனி வரக் கூடிய காலத்திலும் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

இந்த வாரம் இன்று முதல் லஜ்னா மற்றும் அன்ஸாருடைய இஜ்திமாக்களும் ஆரம்பமாகின்றன. குத்தாமுக்கு நான் கூறியது போன்று லஜ்னாவுக்கும், அன்ஸாருக்கும். நான் கூறிக் கொள்வதென்னவென்றால், இந்நாட்களில் குறிப்பாக துஆக்களில் அதிக நேரத்தை செலவிடுங்கள். துரூது ஓதுவதின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இஜ்திமாவின் நோக்கத்தை முழுமையாக்குவதற்கு முயற்சி செய்யுங்கள். அதுவன்றி, கேளிக்கை நிகழ்ச்சிகளிலும், பேச்சுகளிலும் நேரத்தை கழிக்காதீர்கள். அல்லாஹ் எல்லா வகையிலும் இதை அருளுக்குரியதாக ஆக்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி APA தாரிக் அஹ்மத்

* * * * * * * * *

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**அகழ்ப் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

اَللّٰھُمَّ مُنْزِلَ الْكِتٰبِ سَرِيْعَ الْحِسَابِ اِهْزِمِ الْاَحْزَابَ،

اَللّٰھُمَّ اهْزِمْهُمْ وَانْصُرْنَا عَلَيْهِم

என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்.

பொருள்: அல்லாஹ்வே! வேதத்தை இறக்கியவனே! விரைவாக கணக்கு வழக்கு தீர்ப்போனே! படைகளைத் தோல்வியடைச் செய்வாயாக! அல்லாஹ்வே! அவர்களுக்குத் தோல்வியை வழங்குவாயாக! அவர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி புரிவாயாக!

ஒருநாள் தாக்குதல் எவ்வளவு கடுமையானதாக ஆகிவிட்டது என்றால், முஸ்லிம்களின் சில தொழுகைகள் குறித்த நேரத்தில் நிறைவேற்ற முடியாமற் போயின. அதனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எவ்வளவு பெருந்துயரம் ஏற்பட்டது என்றால், அன்னார் (ஸல்) கூறினார்கள்: இறைவன் நிராகரிப்பாளர்களுக்கு தண்டனை வழங்குவானாக! அவர்கள் நம்முடைய தொழுகைகளை இழக்கச் செய்து விட்டார்கள். இதிலிருந்து ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் மீது பெரும் ஒளி படுகிறது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இறைவனை வணங்குவதே உலகில் எல்லாவற்றையும் விட மிகப் பிடித்தமான விஷயமாக இருந்துள்ளது என்பது தெரிய வருகிறது (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள்)

இந்த ஆபத்தான நாட்களிலும் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த ஐவேளை தொழுகைகளையும் அவற்றிற்குரிய நேரங்களில் நிறைவேற்றி வந்தார்கள். ஒருநாள் எதிரியின் கடுமையான தாக்குதல் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்களால் மனநிறைவுடன் நிம்மதியாக உரிய நேரத்தில் தம் இறைவனின் பெயரை எடுத்துரைக்க முடியாமற் போனது என்றால், அன்னாருக்கு அதனால் கடும் துன்பம் ஏற்பட்டது

உங்கள் அனைவருக்கும் தெரியும். உலகத்தின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே செல்கிறது. அழிவின் பக்கம் செல்கிறது. அமெரிக்காவும், வல்லரசுகளும் நீதியுடன் செயல்பட விரும்பவில்லை. போர் விரிவடைந்து கொண்டே செல்கிறது. மேலான அல்லாஹ் அஹ்மதிகளையும், அப்பாவிகளையும் இதன் அச்சமூட்டக் கூட்டக் கூடிய மற்றும் தீய தாக்கங்களிலிருந்து பாதுகாப்பானாக!

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 04 அக்டோபர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **அகா** மாதம் **04 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ

وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்றைய நாட்களில் குத்பாக்களில் அகழ்ப் போர் பற்றி கூறப்பட்டு வருகின்றது. அகழ்ப் போர் குறித்த மேலும் விபரம் இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அகழைத் தாண்டியும் இணை வைப்பாளர்களுக்கு எந்த வெற்றியும் கிடைக்கவில்லை. அது மட்டுமின்றி, கடுமையான தோல்வியை எதிர்கொள்ள வேண்டி வந்தது. எனவே காலையில் தாக்குதல் தொடுக்கலாம் ; யாரும் பின்தங்கி இருக்கக் கூடாது என்பதில் அவர்கள் அனைவரும் ஒன்றுபட்டார்கள். இரவு முழுக்க அவர்கள் ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். சூரியன் உதிப்பதற்கு முன்பு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் அகழுக்கு அருகில் வந்து விட்டார்கள்.

இணை வைப்பாளர்கள் எல்லாப் பக்கத்திலிருந்தும் அகழை சூழ்ந்து கொண்டார்கள். ஒரு படை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கூடாரத்தின் பக்கம் திரும்பியது. அதில் காலித் பின் வலீத் இருந்தார். அகழைத் தாண்டுவதற்கு மீண்டும், மீண்டும் முயற்சி செய்ததுடன் சேர்த்து கடுமையான அம்பு எய்தும் போரும் நடந்தது. முஸ்லிம்கள் தரப்பிலிருந்து ஏதாவது கவனக்குறைவு ஏற்பட்டு விடாதா? எங்காவது சந்தர்ப்பம் கிடைத்தால் அகழைத் தாண்டி விடலாமே! என நிராகரிப்பாளர்கள் காத்திருந்தனர். இந்தத் தாக்குதல்களும், முயற்சிகளும் அவ்வப்போது நடந்து வந்தன.

இதே சந்தர்ப்பத்தில் வஹ்ஷீ பின் ஹர்ப் துஃபைல் பின் நுஃமான் அவர்களை - சிலர் கூறியுள்ளார்கள். துஃபைல் பின் மாலிக் பின் நுஃமான் அன்ஸாரீ அவர்களைத் தனது சிறிய ஈட்டியால் குத்தி ஷஹீது ஆக்கிவிட்டார். ஹஸ்ரத் ஸஃது பின் முஆஸ் (ரலி) அவர்கள் மீதும் ஓர் அம்பு பட்டது. அதனால் அவர்கள் காயமடைந்தார்கள். அதே காயத்தினால் சில நாட்களுக்குப் பிறகு அன்னார் (ரலி) ஷஹீதாகிவிட்டார்கள்.

இந்த நாளில்தான் முஸ்லிம்களுக்குத் தொழுகையையும் அதற்குரிய நேரத்தில் தொழுவது சிரமமாகிவிட்டது. அந்த நாளின் தொடர்ச்சியான பணி நெருக்கடி மற்றும் மீண்டும், மீண்டும் நடந்த தாக்குதலின் காரணத்தினால் - எந்த நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளனவோ அவற்றின் மூலம் பிற்காலத்தில் வந்த அறிவிப்பாளர்களால் அந்த விஷயங்களை சரியான முறையில் பாதுகாத்து வைக்க முடியவில்லை என்பது தெரிய வருகின்றது. சில காலங்களுக்குப் பிறகு கருத்து இப்படி மாறி விட்டது. அதாவது அன்றைய நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உட்பட முஸ்லிம்களால் ளுஹரும் தொழ முடியவில்லை. அஸ்ரும் தொழ முடியவில்லை. எதுவரை என்றால், சூரியன் மறைந்து விட்டது. இந்தத் தொழுகைகள் சூரியன் மறைந்த பிறகு தொழப்பட்டதாகவும், பொதுவாக ஒரு கருத்து கூறப்படுகிறது.

வரலாற்றாசிரியர்கள் சிலரோ முஸ்லிம்கள் ளுஹர் மற்றும் அஸ்ர் தொழுகைகளைத் தொழுது கொள்ளும் பொருட்டு மேலான அல்லாஹ் மறைந்து போன சூரியனைத் திருப்பி அனுப்பினான் என்ற அளவுக்கு மிகைப்படுத்திக் கூறியிருக்கின்றனர். ஆனால், உண்மையில் அப்படியல்ல. அந்த நாள் மிகவும் கடுமையான நாளாக இருந்தது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் உட்பட எல்லா முஸ்லிம்களும் தொடர்ச்சியான தாக்குதலுக்கு இலக்காகியிருந்தார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால், இவர்கள் அனைவரும் குறிப்பாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் எந்தத் ஒரு தொழுகையையும் தொழ முடியாமல் போனதும் கிடையாது.

கடுமையான நாட்களாக இருந்தனதான்; ஆயினும் தொழுகைகளை முற்றிலும் நிறைவேற்ற முடியாத அளவுக்கு இருக்கவில்லை. அன்றைய நாளும் தொழுகைகளையோ நிறைவேற்றி வந்தார்கள்தான். ஆனால், ஒரு தொடர்ச்சியான அச்சம் மற்றும் கவலையின் நிலையில் இந்தத் தொழுகைகள் நிறைவேற்றப்பட்டன. அஸ்ர் நேரத்தில் நிகழ்ந்த தாக்குதல் எவ்வளவு கடுமையாக இருந்ததாகத் தெரிகிறது என்றால், அஸ்ர் தொழுகை தொழுவதில் சிரமம் ஏற்பட்டிருக்கும். அது நெருக்கடியான நேரத்தில் தொழப்பட்டிருக்கும்.

இதை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள். அன்று முஸ்லிம்களின் எல்லாத் தொழுகைகளும்

நேரத்திற்கு நிறைவேற்ற முடியாமற் போயின என்பது சரியல்ல. தொழுகைகளை நிறைவேற்ற முடியாமற் போனதாகக் கூறப்படுகின்றதல்லவா; இது சரியல்ல ; மாறாக, சரியான அறிவிப்புகளிலிருந்து நிரூபணமாவதற்கு ஏற்ப இந்த அளவுதான் நடந்துள்ளது. அதாவது, அப்பொழுது வரை அச்சத் தொழுகை ஷரீஅத்தில் வந்திருக்கவில்லை. எனவே தொடர்ச்சியான ஆபத்து மற்றும் முழு ஈடுபாட்டின் காரணத்தினால், ஒரு தொழுகை மட்டும், அதாவது அஸ்ர் தொழுகை தாமதமாகி விட்டிருந்தது. அது மக்ரிபுடன் இணைத்து தொழப்பட்டது. சில அறிவிப்புகளின் அடிப்படையில் ளுஹர் மற்றும் அஸ்ர் தொழுகை காலம் கடந்து நிறைவேற்றப்பட்டன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இதை எடுத்துக் கூறியுள்ளார்கள்; எழுதியுள்ளார்கள். அன்னார் (ரலி) இவ்வாறு கூறுகிறார்கள்: ஒருநாள் தாக்குதல் எவ்வளவு கடுமையானதாக ஆகிவிட்டது என்றால், முஸ்லிம்களின் சில தொழுகைகள் குறித்த நேரத்தில் நிறைவேற்ற முடியாமற் போயின. அதனால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எவ்வளவு பெருந்துயரம் ஏற்பட்டது என்றால், அன்னார் (ஸல்) கூறினார்கள்: இறைவன் நிராகரிப்பாளர்களுக்கு தண்டனை வழங்குவானாக! அவர்கள் நம்முடைய தொழுகைகளை இழக்கச் செய்து விட்டார்கள்.

இதிலிருந்து ஹஸ்ரத் முஹம்மத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் மீது பெரும் ஒளி படுகிறது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இறைவனை வணங்குவதே உலகில் எல்லாவற்றையும் விட மிகப் பிடித்தமான விஷயமாக இருந்துள்ளது என்பது தெரிய வருகிறது. அப்பொழுது எதிரி நாலாப்புறமிருந்தும் மதீனாவை சுற்றி வளைத்திருந்தான். அப்பொழுது மதீனாவின் ஆண்கள் ஒருபுறமிருக்கட்டும்; அந்தப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உயிர்களும் அபாயத்தில் இருந்தன. அப்பொழுது எதிரி எந்தப் பக்கத்திலிருந்தும் மதீனாவுக்குள் நுழைந்து விடக் கூடாது என்று எந்நேரமும் மதீனத்து மக்களின் உள்ளம் படபடத்துக் கொண்டிருந்தது.

அப்பொழுதும் இறைவனை வணங்குதல் அதற்குரிய நேரத்தில் மிகச் சிறந்த முறையில் நிறைவேறி விட வேண்டும் என்பது ஹஸ்ரத் முஹம்மது ரஸுலுல்லாஹ்(ஸல்) அவர்களின் ஆசையாக இருந்தது. அதாவது உச்சகட்ட அச்சத்தின் தருணத்திலும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஏதாவது ஆசை இருந்தது என்றால், அது இபாதத் கைநழுவி விடக் கூடாது என்பதற்காக மட்டுமே இருந்தது. முஸ்லிம்களின் இபாதத் யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்களைப் போன்று வாரத்திற்கு ஒருநாள் இருப்பதில்லை. மாறாக, முஸ்லிம்களின் இறைவணக்கம் இரவும், பகலும் ஐவேளை தொழப்படுகின்றது.

இப்படிப்பட்ட ஆபத்தான நேரத்திலோ நாளில் ஒருமுறை கூட தொழுகையை நிறைவேற்றுவது மனிதனுக்குக் கடினமான செயலாகும். பிறகு ஐவேளை அதுவும் மிகச் சிறந்த முறையில் ஜமாஅத்தாக எங்கிருந்து நிறைவேற்ற முடியும்? ஆனால், இந்த ஆபத்தான நாட்களிலும் ஹஸ்ரத் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த ஐவேளை தொழுகைகளையும் அவற்றிற்குரிய நேரங்களில் நிறைவேற்றி வந்தார்கள். ஒருநாள் எதிரியின் கடுமையான தாக்குதல் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்களால் மனநிறைவுடன் நிம்மதியாக உரிய நேரத்தில் தம் இறைவனின் பெயரை எடுத்துரைக்க முடியாமற் போனது என்றால், அன்னாருக்கு அதனால் கடும் துன்பம் ஏற்பட்டது.

அந்தத் தொழுகைகளை இரவு நேரத்தில் நிறைவேற்றியதாக கூறப்பட்டுள்ள அந்த அறிவிப்புகள் அனைத்தையும் பலவீனமானவை என்று கூறியுள்ளார்கள். ஒரே ஓர் அறிவிப்பை மட்டுமே சரியானது என்று இந்தக் காலத்தின் நீதி நெறி தீர்ப்பவரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அதில் அஸ்ர் தொழுகை வழக்கத்தை விட நெருக்கடியான நேரத்தில் தொழுததாகக் கூறப்பட்டுள்ளது. ஆக, அகழ்ப் போரில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நான்கு தொழுகைகளை கழா செய்து தொழுததாக ஒரு பாதிரியார் செய்த ஆட்சேபனைக்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

மற்றபடி அகழ்த் தோண்டும் வேளையில் நான்கு தொழுகைகள் ஜம்உ செய்து தொழப்பட்டன என்பதைப் பொறுத்த வரை இந்த முட்டாள்தனமான சஞ்சலத்திற்கான பதில் இதுவாகும்; மார்க்கத்தில் பலவந்தம் இல்லை என்று அல்லாஹ் கூறுகின்றான். அதாவது மனிதனின் அழிவிற்குக் காரணமாக அமையக் கூடிய வகையிலான கடினம் காட்டப்படவில்லை. எனவே அவன் தேவை ஏற்படும்போது, இன்னல்களின் நிலையில் தொழுகைகளை ஜம்உ செய்யுமாறும், கஸ்ர் செய்யுமாறும் கட்டளையிட்டுள்ளான். ஆனால், இதனால் இந்த இடத்தில் நமது எந்தவொரு நம்பகமான ஹதீஸிலும் நான்கு (தொழுகைகள்) ஜம்உ செய்யப்பட்டதாகக் கூறப்படவில்லை.

இதுவோ சரிதான்; இருக்கலாம்தான். ஆனால், எங்கும் நம்பகமான எந்த ஹதீஸிலும், நான்கு தொழுகைகள் ஜம்உ செய்யப்பட்டதாகக் கூறப்படவில்லை. மாறாக, ஸஹீஹ் புகாரீயின் விளக்கவுரையான ஃபத்ஹுல் பாரீ என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; ஒரு தொழுகை, அதாவது அஸ்ர் தொழுகை வழக்கத்தை விடவும் குறுகிய நேரத்தில் தொழப்பட்டது. இந்த அளவுதான் நடந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இப்பொழுது நீங்கள் எமக்கு முன்னால் இருந்தால், நீங்கள் இதை எங்கிருந்து எடுத்துக் கொண்டீர்கள் என்று நாம் உங்களை சற்று உட்கார வைத்து கேட்டிருப்போம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதை எதிரியைப் பார்த்து கூறுகிறார்கள்: நீங்கள் என் முன்னால் இருந்தால், எவ்வாறு, எங்கிருந்து? நீங்கள் இந்த அறிவிப்பை எடுத்துக் கொண்டீர்கள் என்று நான் உங்களிடம் கேட்பேன்.

அன்னார் (அலை)கூறுகிறார்கள்: நான்கு தொழுகைகள் விடுபட்டுப் போயின என்பது என்ன ஒருமித்த அறிவிப்பா?

நான்கு தொழுகைகளோ ஷரீஅத் அடிப்படையிலேயே ஜம்உ செய்யப்படலாம். அதாவது, ளுஹர் மற்றும் அஸ்ர். மேலும், மக்ரிப் மற்றும் இஷா. எனினும், ளுஹர், அஸ்ர், மக்ரிப் மற்றும் இஷா ஆகியவை ஒன்றாகத் தொழப்பட்டதாக பலீவனமான ஓர் அறிவிப்பில் இருக்கிறது. ஆனால், மற்ற சரியான ஹதீஸ்கள் இதை மறுக்கின்றன. அஸ்ர் நெருக்கடியான நேரத்தில் தொழப்பட்டது என்பது மட்டுமே நிரூபணமாகின்றது.

எவ்வாறு இருப்பினும், தெளிவாக தெரிவதாவது, நாள் முழுவதும் உள்ள தொழுகைகள் ஜம்உ செய்து தொழப்படவில்லை. அஸ்ர் நெருக்கடியான நேரத்தில் தொழப்பட்டது. அதற்கு சிறிது நேரம் தான் இருந்தது. சரியான வழிமுறைப்படி நிதானமாக தொழுகை நிறைவேற்றப்படவில்லையே என்று அதற்கான வருத்தமும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்)அவர்களுக்கு இருந்தது.

அகழ்ப் போர் பற்றிய விவரத்தில் மேற்கொண்டு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அகழ்ப் போர் முஸ்லிம்களுக்கு எலும்பை முறிக்கும் போராக இருந்தது. போர் பற்றிய அச்சம் மட்டுமின்றி, பசியும் தட்ப வெப்பத்தின் கடுமையும் உச்சத்தில் இருந்தது. பற்பல வேளைகள் பட்டினி கிடக்க வேண்டி வந்தது.

இதற்கிடையில், இவ்வாறு ஒரு மறைவான உதவி செய்யப்பட்டது. முஸ்லிம்களின் ஓர் ஆயுதம் ஏந்திய படைக் குழு தனது அன்பர் ஒருவரை அடக்கம் செய்வதற்காக சென்று கொண்டிருந்தது. அதற்கு தானியம் சுமத்தப்பட்ட இருபது ஒட்டகங்கள் கிடைத்தன. அவை குறைழா கோத்திரம் சார்பாக பொருட்களை எட்ட வைப்பதற்காக மக்கத்து குறைஷிகளிடம் சென்று கொண்டிருந்தன.ஹுயைய் பின் அக்தப் உடைய பரிந்துரை மற்றும் சிறப்பு முயற்சியால் இந்த ரேஷன் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு சிறிய மோதலுக்குப் பிறகு இந்த அனைத்து ஒட்டகங்களையும் அவர்கள் தங்களது ஆதிக்கத்தின் கீழ் எடுத்துக் கொண்டனர். மேலும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவையில் முன் வைத்தார்கள். அகழ்ப் போர் மக்கள் இதிலிருந்து உண்டார்கள். அந்த ஒட்டகங்களில் சில ஒட்டகங்களை அறுத்தார்கள். சில எஞ்சியிருந்து விட்டன. அவற்றை முஸ்லிம்கள் போர் முடிந்ததும் மதீனாவுக்கு எடுத்துச் சென்று விட்டனர்.

குறைஷிய படைத் தளபதி அபூ ஸுஃப்யானுக்கு இந்தச் செய்தி கிடைத்ததும், ஹுயய் எவ்வளவு அபசகுனமாக இருந்திருக்கின்றான்; இப்பொழுது நாம் திரும்பிச் செல்லும்போது, நம்முடைய பொருட்களை ஏற்றுவதற்கு விலங்கு கூட எதுவும் நம்மிடம் இல்லையே? என்று அவர் கூறினார்.

எவ்வாறு அவர்கள் சுற்றி வளைத்திருந்தார்களோ, அதில் போர் நிலைமையில் இது ஆகுமானதாக இருந்தது. அவர்கள் அந்த மக்களின் ரேஷனைக் கைப்பற்றினார்கள் என்றால், அது முற்றிலும் ஆகுமான விஷயமாக இருந்தது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தக் கூட்டங்களுக்கு எதிராக துஆ (அதாவது தண்டைக்கான துஆ) செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஜாபிர் பின்

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் திங்கள், செவ்வாய், மற்றும் புதன் ஆகிய கிழமைகளில் ளுஹருக்கும் அஸ்ருக்கும் இடைப்பட்ட நேரத்தில் வருகை தந்தார்கள். தமது மேற்போர்வையை வைத்து விட்டார்கள்.மேலும், எழுந்து நின்று கைகளை உயர்த்தினார்கள். அந்தக் கூட்டங்களுக்கு எதிராக துஆ செய்தார்கள். ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முகத்தில் மகிழ்ச்சியை அடையாளம் கண்டு கொண்டோம். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உபை பின் அவ்ஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தக் கூட்டங்களுக்கு எதிராக துஆ செய்தார்கள்.

அபூ நயீம் அதிகப்படியாக கூறியுள்ளார்கள். அதாவது, அதில் கூடுதலாக இவ்வாறும் கூறியுள்ளார்கள்; அன்னார் (ஸல்) காத்திருந்தார்கள். அப்போது சூரியன் மறைந்து விட்டது. அப்பொழுது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்கள் முன் நின்றார்கள். மேலும், இவ்வாறு கூறினார்கள்: மக்களே! நீங்கள் எதிரியுடன் மோத ஆசைப்படாதீர்கள். நீங்கள் மேலான அல்லாஹ்விடம் நலத்தை நாடுங்கள். ஒருவேளை எதிரியுடன் நீங்கள் மோத நேரிட்டால் பிறகு பொறுமை காத்திடுங்கள். மேலும் சொர்க்கம் வாள்களின் நிழல்களின் கீழ் உள்ளது என்பதை அறிந்திடுங்கள். பிறகு அன்னார் (ஸல்) இவ்வாறு கூறினார்கள்:

اَللّٰهُمَّ مُنْزِلَ الْكِتٰبِ سَرِيْعَ الْحِسَابِ
اِهْزِمِ الْاَحْزَابَ،اَللّٰهُمَّ اهْزِمْهُمْ
وَانْصُرْنَا عَلَيْهِم

பொருள்: அல்லாஹ்வே! வேதத்தை இறக்கியவனே! விரைவாக கணக்கு வழக்கு தீர்ப்போனே! படைகளைத் தோல்வியடைச் செய்வாயாக! அல்லாஹ்வே! அவர்களுக்குத் தோல்வியை வழங்குவாயாக! அவர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி புரிவாயாக!

ஓர் அறிவிப்பில் இந்த துஆவும் கூறப்பட்டுள்ளது:

اَللّٰهُمَّ إِنِّيْ أَنْشُدُكَ عَهْدَكَ
وَوَعْدَكَ، اَللّٰهُمَّ إِنْ تَشَأْ
لَاتُعْبَدُ

பொருள்: அல்லாஹ்வே! நான் உன்னிடம் நீ அளித்த உறுதி மற்றும் உனது வாக்குறுதியை முன்னிறுத்தி கேட்கிறேன். அல்லாஹ்வே! நீ நாடினால் உன்னை வணங்கப்பட மாட்டாது.

அபூ ஸயீது குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! துன்பம் மிகவும் அதிகரித்து விட்டது. நிலைமை மிக மோசமாகி விட்டது. நாங்கள் சொல்வதற்கு சொற்கள் ஏதும் இருக்கின்றனவா? அல்லது நாங்கள் செய்ய துஆ ஏதும் இருக்கிறதா? அத்தகைய துஆவைக் கற்றுத் தாருங்கள் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நீங்கள் இவ்வாறு கூறுங்கள் என்று கூறினார்கள்:

اَللّٰهُمَّ اسْتُرْ عَوْرَاتِنَا وَآمِنْ رَوْعَاتِنَا

பொருள்: அல்லாஹ்வே! எங்களது குறைகளை மறைத்திடுவாயாக! எங்களது அச்சத்தை அகற்றிடுவாயாக!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள். முஸ்லிம்கள் சிலர் பதற்றமடைந்து ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்களே! நிலைமைகள் மிகவும் பயங்கரமானவையாக ஆகி விட்டன. இப்பொழுது வெளிப்படையாகப் பார்க்கையில் மதீனா தப்பிப்பதற்கான எந்த நம்பிக்கையும் தென்படவில்லை. தாங்கள் இப்பொழுது மேலான இறைவனிடம் சிறப்பு துஆ செய்யுங்கள். எங்களுக்கும் ஏதாவது துஆவைக் கற்றுக் கொடுங்கள். அதை ஓதுவதன் மூலம் அல்லாஹ்வின் அருள் எங்கள் மீது இறங்கட்டும்! என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள்.

ஹுஸுர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் பதற்றப்படாதீர்கள். நீங்கள் அல்லாஹ்விடம் உங்களுடைய குறைகள் மீது அவன் திரையிட வேண்டும் என்றும், உங்களுடைய உள்ளங்களை வலுப் பெறச் செய்ய வேண்டும் என்றும், பதற்றத்தை அகற்றிட வேண்டும் என்றும் துஆ செய்யுங்கள்.

பிறகு அன்னார் (ஸல்) தாமும் இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ مُنْزِلَ الْكِتٰبِ سَرِيْعَ الْحِسَابِ
اِهْزِمِ الْاَحْزَابَ اَللّٰهُمَّ اهْزِمْهُمْ وَزَلْزِلْهُمْ

பொருள்; அல்லாஹ்வே! திருக்குர்ஆனை என் மீது இறக்கியவனே! மிக விரைவில் தன் அடியார்களிடம் கணக்கு வழக்கு தீர்க்க முடிந்தவனே! ஒன்று கூடி வந்துள்ள இந்தக் கூட்டத்தை தோல்வியடையச் செய்வாயாக!

அவ்வாறே இந்த துஆவை செய்தார்கள்.

يَا صَرِيْخَ الْمَكْرُوْبِيْنَ يَا مُجِيْبَ الْمُضْطَرِّيْنَ
اكْشِفْ هَمِّيْ وَغَمِّيْ وَكَرْبِيْ
فَاِنَّكَ تَرٰى مَا نَزَلَ بِيْ وَبِاَصْحَابِيْ

பொருள்: அல்லாஹ்வே! நான் மீண்டும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நீ அவர்களை அழித்து விடுவாயாக! எங்களுக்கு இவர்கள் மீது வெற்றியை வழங்குவாயாக! இவர்களுடைய எண்ணங்களை ஆட்டங்காணச் செய்வாயாக! வேதனையுடையவர்களின் துஆக்களை செவியேற்கக் கூடியவனே! பதற்றத்தில் மூழ்கியிருக்கும் மக்களின் அழைப்புக்கு பதில் அளிக்கக் கூடியவனே!

இந்த துஆவின் மொழியாக்கம் இதுவாகும் ; வேதனை மிக்கவர்களின் துஆக்களை செவியேற்கக் கூடியவனே! பதற்றத்தில் மூழ்கியிருக்கும் மக்களின் அழைப்புக்கு பதில் அளிக்கக் கூடியவனே! எனது துயரம் எனது கவலை மற்றும் எனது பதற்றத்தை அகற்றுவாயாக! ஏனெனில், எனக்கும் என் தோழர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் அந்த இன்னல்களை நீ அறிவாய்.

வரலாற்றில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: போர் இவ்வாறே தனது உச்சத்தை அடைந்துவிட்டிருந்தது. மக்கத்து குறைஷியர்களும், அவர்களுடைய நட்புக் கோத்திரங்களும் இப்பொழுது நீண்ட கால முற்றுகையால் நொந்து போயிருந்தார்கள். மிக விரைவாக ஏதாவது முடிவான போர் தொடுத்து முஸ்லிம்களை அழித்து விட வேண்டும் என்ற அவசரத்தில் இருந்தனர். எவ்வாறு போர் உத்தியின் அடிப்படையில் முஸ்லிம்கள் நாலாப்புறமிருந்தும் சூழப்பட்டிருந்தார்களோ, பனூ குறைழா போன்ற அவர்களது நட்புக் கோத்திரத்தினர் மதீனாவுக்கு உள்ளேயே இருந்தனரோ இந்த எல்லா வலுவான செயல்களும் நிராகரிப்பாளர்களின் நம்பிக்கையையும், மன தைரியத்தையும் அதிகரிப்பதற்குப் போதுமானவையாக இருந்தன.

இப்பொழுது இந்த மக்கள் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே முறையாக தாக்குதல் தொடுத்து விடலாம்; மதீனாவைத் தரைமட்டமாக்கி விடலாம் என்று விரும்பினார்கள். நிராகரிப்பாளர்களின் தலைவர்கள் இந்த நுட்பமான செயல் திட்டத்தை வகுத்துக் கொண்டிருந்தார்கள். தத்பீர் குனந் பந்தா.பொருள்: மனிதன் திட்டம் தீட்டுகின்றான்; மறுபுறம் மேலான அல்லாஹ்வின் திட்டம் என்னவாக இருந்தது? தக்தீர் குனந் கன்தஃ அதாவது, பாருங்கள்; நான் உங்களை என்ன செய்யப் போகிறேன்? என்று (இறைவனின்) நியதி அதைப் பார்த்து சிரிக்கின்றது. அதாவது அது செல்லுபடியாகாது. பிறகு தக்தீர் குனந் கன்தஃ என்பதற்கு ஏற்ப மேலான அல்லாஹ் ஒரு மறைவான உதவியைத் துவக்கி விட்டான்.

இதை விளக்கியவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் எழுதியுள்ளார்கள்: நயீம் பின் மஸ்ஊது எனும் ஒருவர் ஃகத்ஃபான் கோத்திரத்தின் கிளைக் கோத்திரமான அந்தப் போரில் முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் புரிந்து கொண்டிருந்த அஷ்ஜஅ கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார். அவர் மதீனாவுக்கு வந்து சேர்ந்து விட்டிருந்தார். இந்த நபர் உள்ளத்தால் முஸ்லிம் ஆகிவிட்டிருந்தார். ஆனால், அவர் முஸ்லிம் ஆகிவிட்டார் என்ற செய்தி அது வரை காஃபிர்களுக்கு கிடைத்திருக்கவில்லை. இந்த நிலையிலிருந்து பயனடைந்தவாறு அவர் மிகச் சாதுர்யமாக எப்படிப்பட்ட ஒரு திட்டம் வகுத்தார் என்றால், அதனால் நிராகரிப்பாளர்கள் மத்தியில் பிரிவினை ஏற்பட்டு விட்டது.

எல்லாவற்றிற்கும் முதலாக நயீம் பின் மஸ்ஊது பனூ குறைழா கோத்திரத்திடம் சென்றார். அவர்களுடன் அவரது பழைய தொடர்புகள் இருந்தன என்பதனால், அவர் அவர்களின் தலைவர்களைச் சந்தித்து இவ்வாறு கூறலானார்; ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடன் வாக்குறுதி மீறி குறைஷியர்களுடனும், ஃகத்ஃபான் கோத்திரத்துடனும் இணைந்து கொண்டு நீங்கள் செய்தது சரியல்ல என்று நான் நினைக்கின்றேன். குறைஷியர்கள் ஃகத்ஃபான் கோத்திரத்தினர் ஆகியோரோ இங்கு மதீனாவில் சில நாள் விருந்தாளிகள் ஆவர். ஆனால், எந்நிலையிலும் நீங்கள் இங்குதான் இருக்க வேண்டும். ஏனெனில், இது உங்களுடைய ஊராகும். இங்கு முஸ்லிம்களுடன்தான் நீங்கள் பழகியாக வேண்டும். நீங்கள் இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.குறைஷியர்கள் போன்றோர் இங்கிருந்து செல்லும் போது உங்கள் மீது எந்த அக்கறையும் கொள்ள

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM
Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thalkkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/83, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

மாட்டார்கள். முஸ்லிம்கள் கருணை காட்டினால் காட்டட்டும்! என்று உங்களை அப்படியே விட்டு விட்டுச் சென்று விடுவார்கள். எனவே உங்களுடன் எந்த நம்பிக்கைத் துரோகமும் செய்யப்படாது என்று உங்களுக்கு மனநிறைவு இருப்பதற்காக, குறைந்தபட்சம் நீங்கள் குறைஷியர்கள் மற்றும் ஃகத்ஃபான் கோத்திரத்தினரிடம் அவர்களுடைய சில மனிதர்களைப் பணயமாக உங்களிடம் ஒப்படைத்து விடுமாறாவது கூறுங்கள். நயீம் கூறிய இந்த விஷயம் பனூ குறைழா கோத்திரத்தினரின் தலைவர்களுக்குப் புரிந்து விட்டது. அவர்கள் பின்னால் தங்களுக்கு எந்த ஓர் இன்னலையும் எதிர்கொள்ள நேரிடாது இருப்பதற்காக, குறைஷியர்களிடம் பணயமாக ஆட்களைக் கேட்பதற்கு இணங்கி விட்டார்கள்.

இதற்குப் பிறகு நயீம் பின் மஸ்ஊது குறைஷியர்களின் தலைவர்களிடம் சென்றார். அவர்களிடம் சென்று, நீங்கள் சென்ற பிறகு தங்களுக்கு எதுவும் இன்னலை எதிர்கொள்ள நேரிடுமோ? என்று பனூ குறைழா கோத்திரத்தார் அஞ்சுகின்றனர். எனவே அவர்கள் உங்களுடைய இந்த ஒன்றுபடுதலில் தடுமாற்றம் கொள்கின்றனர். உத்தரவாதத்திற்காக உங்களிடமிருந்து சில பணயக் கைதிகளை கேட்க வேண்டுமென அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், நீங்கள் அவர்களுக்குப் பணயக் கைதிகளை ஒருபோதும் கொடுத்து விடாதீர்கள். அவர்கள் உங்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்து விட்டு உங்களுடைய பணய ஆட்களை முஸ்லிம்களிடம் ஒப்படைத்து விடப் போகிறார்கள் போன்ற விஷயங்களைக் கூறினார்.

இவ்வாறே அவர் தனது ஃகத்ஃபான் கோத்திரத்திடம் சென்று இதே போன்ற விஷயங்களைக் கூறினார். இப்பொழுது இறைவன் என்ன நிகழச் செய்தான்? என்றால், குறைஷியர்கள் மற்றும் ஃகத்ஃபான் கோத்திரத்தினர் முஸ்லிம்கள் மீது மீண்டும் ஒன்றுபட்ட ஒரு தாக்குதல் தொடுக்க வேண்டும்; முஸ்லிம்கள் தங்களுடைய எண்ணிக்கை குறைவு காரணமாக இதை எதிர்த்துப் போட்டி போட முடியாது போகும் பொருட்டு, இந்தத் தாக்குதல் நகரத்தின் நாலாப்புறத்திலிருந்தும் ஒரே நேரத்தில் செய்யப்பட வேண்டும் ; ஏதாவது ஓரிடத்திலிருந்து அவர்களது வரிசை உடைந்து விட வேண்டும்; வரிசை உடைந்து தாக்குதல் தொடுப்பவர்களுக்கு வழிவிட்டு விட வேண்டும் என்று முன்னரே தீர்மானித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த எண்ணத்தின் கீழ் அவர்கள், முற்றுகை நீண்டு கொண்டே செல்கிறது; மக்கள் நொந்து போகிறார்கள். எனவே எல்லாக் கோத்திரங்களும் ஒன்று சேர்ந்து நாளைய தினம் முஸ்லிம்கள் மீது ஓர் ஒன்றுபட்ட தாக்குதல் தொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்துள்ளோம். எனவே நீங்களும் நாளைய தாக்குதலுக்காக ஆயத்தமாகி விடுங்கள் என்று பனூ குறைழாவுக்குத் தூது அனுப்பினார்கள்.

பனூ குறைழாவிடம் ஏற்கனவே நயீம் பின் மஸ்ஊது பேசியிருந்தார். (எனவே) அவர்கள் இவ்வாறு பதில் அளித்தார்கள்: நாளையோ எங்களுக்கு ஸப்த் நாளாகும். (சனிக்கிழமையாகும்). எனவே நாங்கள் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம். அது மட்டுமின்றி, நீங்கள் உங்கள் தரப்பிலிருந்து, பின்னால் எங்களுடன் நம்பிக்கை துரோகம் செய்யப்படாது என்பதற்கு உத்திரவாதம் அளிக்கும் விதமாக, உங்களுடைய சில நபர்களை எங்களிடம் ஒப்படைத்து விடாத வரை எங்களால் அந்தத் தாக்குதலில் கலந்து கொள்ள முடியாது.

குறைஷியர்கள் மற்றும் ஃகத்ஃபான் கோத்திரத்தினருக்கு பனூ குறைழாவின் இந்த பதில் அளிக்கப்பட்ட போது அவர்கள் வியந்து போனார்கள். பனூ குறைழா கோத்திரத்தினர் நம்பிக்கை துரோகம் செய்யத் துணிந்துள்ளார்கள் என்று நயீம் சரியாகத்தான் கூறியுள்ளார் என்று கூற ஆரம்பித்தனர். மறுபுறம், நாங்கள் பணய ஆட்களைத் தரமாட்டோம்; நீங்கள் உதவி செய்ய வரவேண்டும் என்றால், ஒன்றும் தராமலேயே வாருங்கள் என்ற குறைஷியர்கள் மற்றும் ஃகத்ஃபான் கோத்திரத்தினரின் பதில் பனூ குறைழாவுக்கு அளிக்கப்பட்டது. அப்பொழுது பனூ குறைழா கோத்திரத்தினர், குறைஷியர்கள் மற்றும் ஃகத்ஃபான் கோத்திரத்தினரின் எண்ணம் நல்லதாக இல்லை என்று நயீம் நமக்கு சரியான ஆலோசனையைத் தான் கூறியுள்ளார் என்று கூறினர். இவ்வாறு நயீம் என்பவரின் அழகிய திட்டத்தால் நிராகரிப்பாளர்களின் படையில் பிரிவினை மற்றும் கருத்து வேறுபாட்டின் சூழல் உருவாகி விட்டது. இருவரும் ஒருவர் மற்றவர் மீது சந்தேகப்பட்டனர். இது நயீம் என்பவர் மேற்கொண்ட திட்டம் ஆகும்.

ஆனால், நயீம் என்பவரின் உன்னதமான செயல் என்னவென்றால், அவர் இத்தகைய நுணுக்கமான வேலையை செய்து முடிக்கும் போதும் கூட, இயன்ற அளவு பொய்யான கூற்று என குறிப்பிட்டு பெயர் வைக்கத் தக்க எந்த விஷயத்தையும் தனது நாவால் அவர் கூறவில்லை. மற்றபடி, உன்னதமான தந்திரமாக, ஒரு திட்டத்தை மேற்கொண்டார்கள். ஏதாவது திட்டம் மேற்கொள்வது அல்லது மனிதன் எதிரியின் தீங்கிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு ஏதாவது தந்திரம் செய்வது என்ற இது ஒன்றும் ஆட்சேபனைக்குரிய விஷயம் அல்ல. மாறாக, போர் உத்தியின் மிகப் பயன்தரக் கூடிய ஒரு பகுதியாகும். அதன் மூலம் அநீதியிழைக்கும் எதிரியை படு தோல்வியுறச் செய்வதற்கும், தேவையில்லாத இரத்தம் சிந்தச் செய்யும் தொடரைத் தடுப்பதற்கும் பெரிதும் உதவியாக இருக்கும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: சில நாட்களுக்குப் பிறகு இரண்டு பிரிவுகளும், ஒரு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் யூதர்கள் மற்றும் இணை வைப்பாளர்களின் படைகள் முஸ்லிம்கள் மீது திடீர் தாக்குதல் தொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். ஆனால், அப்பொழுது மேலான அல்லாஹ்வின் ஆதரவு ஒரு விநோதமான முறையில் வெளிப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு; ஃகத்ஃபான் கோத்திரத்தைச் சேர்ந்த நயீம் எனும் ஒரு நபர் உள்ளத்தால் முஸ்லிமாக இருந்தார். இந்த நபரும் நிராகரிப்பாளர்களுடன் வந்திருந்தார்.

ஆனால், தனக்கு ஏதாவது சந்தர்ப்பம் கிடைத்தால் முஸ்லிம்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று அவர் காத்துக் கொண்டிருந்தார். தனியாக மனிதன் என்னதான் செய்ய முடியும்? ஆனால், யூதர்களும், காஃபிர்களுடன் இணைந்து கொண்டனர். இப்பொழுது வெளிப்படையில், முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு எந்த வழியும் தென்படுவதில்லை என்பதை அவர் பார்த்த போது, இந்த சூழ்நிலையால் அவர் எந்த அளவுக்குத் தாக்கத்திற்குள்ளானார் என்றால், எவ்வாறாயினும், இந்தக் குழப்பத்தை அகற்றுவதற்கு நான் ஏதாவது செய்திட வேண்டும் என்று அவர் தீர்மானித்து விட்டார்.

எனவே இரு பிரிவினரும் சேர்ந்து ஒருநாள் தாக்குதல் தொடுக்க வேண்டும் என்று முடிவானதும், அவர் பனூ குறைழாவிடம் சென்றார். அவர்களின் தலைவர்களிடம் அரேபியர்களின் படை ஓடிவிட்டால், முஸ்லிம்கள் உங்களுடன் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்று கூறுங்கள். நீங்கள் முஸ்லிம்களுடன் உடன்படிக்கை செய்துள்ளீர்கள். உடன்படிக்கை செய்து அதை முறிப்பதன் விளைவாக உங்களுக்குக் கிடைக்கும் தண்டனையைப் பற்றி யோசித்துப் பாருங்கள் என்று கூறினார். அவர்களுடைய உள்ளங்கள் சற்று அஞ்சின. பிறகு நாங்கள் என்ன செய்யட்டும்? என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு நயீம் கூறினார்: அரேபியர்கள் ஒன்றுபட்ட தாக்குதல் தொடுப்பதற்காக உங்களிடம் விருப்பத்தை வெளிப்படுத்தும் போது நீங்கள் இணை வைப்பாளர்களிடம், உங்களுடைய எழுபது நபர்களை எங்களிடம் பணயமாக அனுப்பி விடுங்கள்; அவர்கள் எங்களுடைய கோட்டைகளைப் பாதுகாப்பார்கள். நாம் மதீனாவின் பின்புறத்திலிருந்து அதன் மீது, அதாவது முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்து விடுவோம் என்று கோரிக்கை வையுங்கள்.

பிறகு அவர் அங்கிருந்து விலகி இணை வைப்பாளர்களின் தலைவர்களிடம் சென்றார். அவர்களிடம், இந்த யூதர்களோ மதீனா வாழ் மக்கள் ஆவர். சந்தர்ப்பம் பார்த்து இவர்கள் உங்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்து விட்டால், பிறகு என்ன செய்வீர்கள்? இவர்கள் முஸ்லிம்களை மகிழ்விப்பதற்காகவும், தங்களுடைய

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com


GRIZZLY
BE ALWAYS AHEAD
Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

பாவங்களை மன்னிக்கச் செய்வதற்காகவும் உங்களுடைய ஆட்களைப் பணயமாக கேட்டுப் பெற்று, அவர்களை முஸ்லிம்களிடம் ஒப்படைத்து விட்டால் பிறகு நீங்கள் என்ன செய்வீர்கள்? அவர்கள் உறுதியானவர்களாக இருக்கின்றார்களா? இல்லையா? என்று நீங்கள் அவர்களை சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், உங்களுடன் சேர்ந்து முறையாக தாக்குதல் தொடுப்பதற்கு அவர்களுக்கு விரைவாக அழைப்பு விடுங்கள் என்றார்.

காஃபிர்களின் தலைவர்கள் இந்த ஆலோசனையை சரியானதாகக் கருதி, அடுத்த நாள் யூதர்களுக்கு, நாங்கள் ஒரு கூட்டுத் தாக்குதல் தொடுக்க விரும்புகிறோம்; நீங்களும் உங்களது படையுடன் சேர்ந்து நாளை தாக்குதல் தொடுத்து விடுங்கள் என்று தூது அனுப்பினார்கள். பனூ குறைழா கோத்திரத்தார் கூறினார்கள்: முதல் விஷயம் நாளை எங்களுக்கு ஸப்த் நாள்(சனிக்கிழமை) ஆகும்; நாங்கள் ஸப்த் நாளன்று தாக்குதல் தொடுப்பதில்லை. எனவே, அன்று எங்களால் போரிட முடியாது. இரண்டாவது விஷயம், நாங்கள் மதீனாவில் வாழக் கூடியவர்கள் ஆவோம். நீங்கள் வெளியூர் காரர்கள்; நீங்கள் போரை விட்டு விட்டுச் சென்று விட்டால், எங்கள் நிலை என்னவாகும்? எனவே நீங்கள் 70 பேரைப் பணயமாக எங்களிடம் கொடுத்து விடுங்கள். அப்பொழுதுதான் நாங்கள் போரில் கலந்து கொள்வோம்.

நிராகரிப்பாளர்களின் உள்ளத்தில் ஏற்கனவே சந்தேகம் உருவாகி விட்டிருந்தது. எனவே அவர்கள் அவர்களுடைய இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற மறுத்து விட்டனர். எங்களுடனான உங்களது ஒற்றுமை உண்மையானதாக இருந்திருந்தால், இது போன்ற கோரிக்கைக்கு அர்த்தமே இல்லை என்று கூறினார்கள். இந்த நிகழ்வுகளால் ஒருபுறம் யூதர்களின் உள்ளங்களில் சஞ்சலங்கள் உருவாகத் துவங்கின. மறுபுறம் நிராகரிப்பாளர்களின் உள்ளங்களில் சஞ்சலங்கள் ஏற்படத் துவங்கின. ஒரு விதிமுறை இருப்பதற்கு ஏற்ப, உள்ளத்தில் சஞ்சலங்கள் ஏற்படும் போது, வீரம் எனும் ஆன்மாவும் முடிவுக்கு வந்து விடுகிறது.

பிறகு ஓரிரவில் வேகமான புயல் வடிவத்திலும் அல்லாஹ்வின் நியதி வெளிப்பட்டது. அதன் காரணமாக, கூட்டங்களுக்கு அல்லது பல்வேறு கோத்திரங்களுக்கு, இணை வைப்பாளர்களுக்கு, தாக்குதல் தொடுத்தவர்களுக்கு ஓட வேண்டி நேர்ந்தது. அதன் விபரத்தில் எழுதப்பட்டுள்ளது: இப்னு இஸ்ஹாக் அதை இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள்: மேலான அல்லாஹ் கடும் குளிரான இரவில் எத்தகைய வலுவான சூறாவளியை அனுப்பினான் என்றால், அது நிராகரிப்பாளர்களின் அடுப்புப் பானைகளைக் கவிழ்த்து விட்டது. பாத்திரங்களைத் தூக்கி வீசிவிட்டது.

பலாஸரீ இவ்வாறு எழுதியுள்ளார்: பிறகு மேலான அல்லாஹ் நிராகரிப்பாளர்களுக்கு எதிராக சூறாவளி மூலமாக முஸ்லிம்களுக்கு உதவி புரிந்தான். இது மஞ்சள் நிற சூறாவளியாக இருந்தது. அது அவர்களுடைய கண்களை அடைத்து விட்டது. அவர்களிடம் பலவீனத்தையும், கோழைத்தனத்தையும் நுழைத்து விட்டது. இணை வைப்பாளர்கள் பின்வாங்கி விட்டனர். தங்களது கூடாரமிருந்த இடத்துக்குச் சென்று விட்டனர். காற்று அவர்கள் மீது வீசிக் கொண்டே இருந்தது. வானவர்கள் அவர்களை மூடிக் கொண்டனர். அவர்களுடைய கண்களைக் குத்தி விட்டார்கள். எனவே அவர்கள் திரும்பி விட்டார்கள்.

இதன் விபரத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

நயீம் பின் மஸ்ஊது உடைய அமைதியை விரும்பும் இந்த முயற்சியின் விளைவு வீணாகியிருப்பதற்கும் சாத்தியமிருந்தது. ஒரு தற்காலிக தடுமாற்றம் ஏற்பட்டு, ஆட்டம் கண்ட பிறகு நிராகரிப்பாளர்களிடம் மீண்டும் ஒற்றுமை மற்றும் உறுதித் தன்மையின் ஆன்மா உருவாகியிருக்கக் கூடும்.

ஆனால், இறைவன் எப்படி நிகழச் செய்தான்? என்றால், அந்த சம்பவங்களுக்குப் பிறகு இரவில் மிகக் கடுமையான ஒரு புயல் வீசியது. அது ஒரு திறந்த வெளியில் இருந்த காஃபிர்களின் விரிவான முகாமில் ஒரு பயங்கரமான சூறாவளியைக் கிளப்பி விட்டது. கூடாரங்கள் பிடிங்கி வந்து விட்டன. கூடாரத்தின் சுவராக இருக்கும் திரைகள் கிழிந்து பறந்து விட்டன. பானைகள் கவிழ்ந்து அடுப்புகளில் விழுந்து விட்டன. மணல் மற்றும் கூழாங்கற்களின் மழை மக்களின் காதுகள், கண்கள் மற்றும் மூக்கு துவாரங்களை நிறைத்து விட்டன. எல்லாவற்றையும் விடப் பெரிய விநோதமான செயல் என்னவென்றால், அரேபியாவின் தொன்மையான வழக்கப்படி இரவு நேரத்தில் மிகவும் பேணிக்காத்தவாறு ஆங்காங்கே எரிய வைக்கப்பட்டு வந்த அந்த சமுதாய நெருப்பு இங்கும், அங்கும் குப்பையைப் போன்று பறந்து அணைய ஆரம்பித்து விட்டது.

அந்த நெருப்பு எல்லாம் அணைந்து விடக் கூடாது என்று அவர்களுக்குப் பெரும் கொள்கை இருந்தது. வேதனை தரும் முற்றுகையின் நீட்டம் மற்றும் ஒற்றுமையின் பரஸ்பர நம்பிக்கையின் கசப்பான அனுபவங்களால் ஏற்கனவே நிராகரிப்பாளர்களுடைய உள்ளங்கள் ஆட்டங் கண்டு கொண்டிருந்தன. கற்பனைகளைப் பின்பற்றி வந்த அவர்களுடைய உள்ளங்களுக்கு அந்தக் காட்சிகள் எத்தகைய ஓர் அதிர்ச்சியைத் தந்தன என்றால், பிறகு அவர்களால் சுதாரித்துக் கொள்ள முடியவில்லை.

காலை விடிவதற்கு முன்னரே காஃபிர்களின் படைகள் எனும் தூசு துகள்களை விட்டும் மதீனாவின் கீழ்வானம் தூய்மையாகி விட்டது. ஆக, எப்படி நிகழ்ந்தது? என்றால், அந்த சூறாவளி வலுபிடித்த போது, அபூஸுஃப்யான் தனக்கு அக்கம் பக்கம் இருந்த குறைஷிய தலைவர்களை அழைத்து, நம்முடைய சிரமங்கள் மிகவும் அதிகரிக்கின்றன ; இப்பொழுது இங்கு அதிகம் தங்குவது பொருத்தமானதல்ல; எனவே நாம் திரும்பிச் செல்வது சிறந்ததாகும். எவ்வாறாயினும், நான் செல்கிறேன் என்று கூறினார். இதைக் கூறிவிட்டு அவர் தம் ஆட்களுக்குத் திரும்பிச் செல்லக் கட்டளையிட்டார். பிறகு தனது ஒட்டகத்தின் மீது பயணமானார். ஆனால், பதற்றத்தின் நிலை எப்படி இருந்தது? என்றால், ஒட்டகத்தின் கால்களை அவிழ்க்க வேண்டும் என்பது அவருக்கு நினைவிருக்கவில்லை. ஏறி அமர்ந்த பிறகு ஒட்டகம் அசையாததனால், ஒட்டகத்தின் கால்கள் இன்னும் அவிழ்க்கப்படவில்லை என்பது அவருக்கு நினைவுக்கு வந்தது.

அப்பொழுது இக்ரிமா பின் அபீ ஜஹ்ல் அபூ ஸுஃப்யானுக்கு அருகில் நின்று கொண்டிருந்தார். அவர் சற்று கசப்பான தொணியில், அபூ ஸுஃப்யானே! நீர் படையின் தலைவர் ஆவீர்; படைத்தளபதி ஆவீர். படையை விட்டு விட்டு ஓடுகிறீரா? உமக்கு மற்றவர்களைப் பற்றிய கவலை கூட இல்லையோ? என்று கேட்டார். இதனால் அபூஸுஃப்யான் வெட்கமடைந்தார். அவர் ஒட்டகத்திலிருந்து இறங்கி, இதோ நான் இப்பொழுது போகவில்லை. ஆனால், நீங்கள் விரைவாக ஆயத்தம் மேற்கொள்ளுங்கள்; எவ்வளவு விரைவாக முடியுமோ இங்கிருந்து புறப்பட்டு செல்லுங்கள் என்று கூறினார்.

எனவே மக்கள் வேகவேகமாக ஆயத்தத்தில் ஈடுபட்டு விட்டனர். அபூஸுஃப்யான் சிறிது நேரத்திற்குப் பிறகு தனது ஒட்டகத்தில் ஏறி திரும்பிச் செல்லப் புறப்பட்டு விட்டார். அப்பொழுது வரை ஃகத்ஃபான் கோத்திரம் மற்றும் மற்ற கோத்திரங்களுக்கு குறைஷியர்களின் இந்த ஓட்டம் பிடித்தது பற்றிய தகவல் தெரிந்திருக்கவில்லை. ஆனால், குறைஷியர்களின் முகாம் வேகமாக காலியாக ஆரம்பித்ததும், மற்றவர்களுக்கும் அதைப் பற்றிய தகவல் கிடைத்தது. இதனால், அவர்களும் பதற்றமடைந்து புறப்படுவதற்கான அறிவிப்பை செய்து விட்டார்கள்.

பனூ குறைழா கோத்திரத்தினரும் தங்களுடைய கோட்டைகளுக்குள் சென்று விட்டனர். பனூ குறைழா உடன் சேர்ந்து பனூ நளீர் கோத்திரத்தின் தலைவன் ஹுயய் பின் அக்தப், அவர்களுடைய கோட்டைகளுக்குள் சென்றான். இவ்வாறு காலையில் வெண்மை வெளிப்படுவதற்கு முன்னரே முழு மைதானமும் காலியாகி விட்டது. உடனடியான மற்றும் சிந்தனைகளை வியப்பில் ஆழ்த்தக் கூடிய ஒரு மாற்றமாக முஸ்லிம்கள் தோல்வியடைய இருந்து வெற்றியாளர்கள் ஆகி விட்டனர். காஃபிர்கள் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி விடப் போகிறார்கள் என்ற ஆபத்து இருந்தது எங்கே, அந்த நிலை இருந்தது எங்கே! இப்பொழுது நிலை எப்படி ஆகிவிட்டது? என்றால், அவர்கள் வெற்றியாளர்கள் ஆகிவிட்டார்கள்!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இதற்கு இவ்வாறு விளக்கம் எழுதியுள்ளார்கள்: ஐயங்களையும், சந்தேகங்களையும் உடன் கொண்டவாறு காஃபிர்களின் படை இரவு ஓய்வு எடுப்பதற்காக தன்னுடைய கூடாரங்களுக்குச் சென்றது. ஆக, மேலான இறைவன் விண்ணின் உதவிக்கான மற்றொரு வழியைத் திறந்து விட்டான். இரவு ஒரு கடுமையான புயல் வீசியது. அது கூடாரங்களின் சுவராக இருக்கும் திரைகளைக் கிழித்து விட்டது. அடுப்புகளிலிருந்து பானைகளை விழ வைத்துவிட்டது. சில கோத்திரங்களின் தீ எல்லாம் அணைந்து விட்டது.

இணை வைப்பாளர்களான அரேபியர்களிடம் ஒரு வழக்கம் இருந்தது. அதாவது, அவர்கள் இரவு முழுவதும் தீ மூட்டி வைப்பார்கள். இதை அவர்கள் நல்ல சகுனமாக கருதி வந்தார்கள். எவரது தீ அணைந்து விடுமோ அவர் இன்றைய நாள் தனக்கு அபசகுணமானது என்று நினைத்து வந்தார். அவர் தனது கூடாரத்தைச் சுருட்டிக் கொண்டு போர்க் களத்தை விட்டு பின்னால் சென்று விடுவார். எந்தக் கோத்திரங்களின் தீ அணைந்து விட்டதோ அவர்கள் இந்த வழக்கப்படி தங்களுடைய கூடாரங்களைச் சுருட்டிக் கொண்டு பின்னுக்குச் சென்று விட்டார்கள். இவ்வாறு ஒருநாள் பின்னால் காத்திருந்து விட்டு, பிறகு படையில் வந்து கலந்து கொள்ளலாம் என்று இருந்தார்கள்.

ஆனால், பகலின் சண்டைகள்

காரணமாக படைகளின் தலைவர்கள் மனதில் ஐயங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. எந்தக் கோத்திரங்கள் பின்வாங்கினவோ அவற்றின் அக்கம் பக்கத்துக் கோத்திரங்கள் யூதர்கள் முஸ்லிம்களுடன் இணைந்து இரவோடு இரவாகத் தாக்குதல் தொடுத்து விட்டார்கள் போலும்; அதனால்தான் நமது அக்கம்பக்கத்துக் கோத்திரங்கள் ஓடுகின்றன போலும் என்று நினைத்து விட்டார்கள். எனவே அவர்களும் வேக வேகமாகத் தங்களது தங்குமிடத்தை காலி செய்து விட்டு பொருட்களை எடுத்து வைக்க துவங்கி விட்டனர். மேலும், மைதானத்திலிருந்து ஓடத் துவங்கி விட்டனர்.

அபூஸுஃப்யான் தனது கூடாரத்தில் ஓய்வாக படுத்துக் கொண்டிருந்தார். அவருக்கு இந்த சம்பவம் பற்றிய தகவல் கிடைத்தது. அவர் பயந்து போய் கட்டி வைத்திருந்த தனது ஒட்டகத்தின் மீது ஏறி அமர்ந்தார். அதை ஒட்ட குதிகாலை அசைக்க ஆரம்பித்து விட்டார். இறுதியில், இது இவர் என்ன முட்டாள்தனம் செய்கிறார்? என்று அவருடைய நண்பர்கள் அவருக்கு கவனமூட்டினர். இதனால் அவர் ஒட்டகத்தின் கயிறுகளை அவிழ்த்தார். அவரும் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து மைதானத்திலிருந்து ஓடி விட்டார்.

காஃபிர்களின் நிலை இதுவான பிறகு, அதை ஆய்வு செய்வதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இணை வைப்பாளர்களைப் பற்றி செய்தி அறிந்து வருவதற்காக ஹுஸைஃபா பின் யமான் (ரலி) அவர்களை அனுப்பினார்கள். இதன் விபரத்தில் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

காஃபிர்கள் இவ்வாறு தாமாகவே போர்க் களத்திலிருந்து ஓடிக் கொண்டிருந்த அதே இரவு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமக்கு அக்கம் பக்கத்தில் இருந்த ஸஹாபா பெருமக்களைப் பார்த்து, இப்பொழுது சென்று படையின் நிலையை அறிந்து வருபவர் யாராவது உங்களில் உள்ளாரா? என்று குரல் கொடுத்தார்கள்.

ஆனால், ஸஹாபா பெருமக்கள் அறிவிக்கின்றார்கள்: அப்பொழுது குளிர் எந்த அளவுக்குக் கடுமையானதாக இருந்தது என்றால், அத்துடன் அச்சம், களைப்பு மற்றும் பசி ஆகியவற்றின் நிலை எப்படி இருந்தது? என்றால்,ஏதாவது பணிவுடன் பதில் கூறுவதற்கோ அல்லது தனது இடத்திலிருந்து அசைவதற்கோ எங்களில் எவருக்கும் ஆற்றல் இருக்கவில்லை. இறுதியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமே பெயரை எடுத்து ஹுஸைஃபா பின் யமான் அவர்களை அழைத்தார்கள். அதனால் அன்னார் (ரலி) குளிரில் நடுங்கியவாறு நின்று விட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் பெரும் பரிவுடன் அவர்களது தலையில் தமது கரங்களைத் தடவினார்கள். அவர்களுக்காக நன்மைக்கான துஆ செய்தார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்: நீர் சற்றும் அஞ்சாதீர்; மனநிறைவுடன் இருப்பீராக ; உமக்கு எந்தத் துன்பமும் ஏற்படாது. இன்ஷா அல்லாஹ்! நீர் ஒளிந்து ஒளிந்து காஃபிர்களின் முகாமிற்குச் சென்று விடும்; எவருடனும் எந்த மோதலும் வைத்துக் கொள்ளாதீர்; உம்மையும் வெளிப்படுத்திக் காட்டிக் கொள்ளாதீர்!

ஹுஸைஃபா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் புறப்பட்ட போது, எனது உடலில் குளிர் பெயருக்குக் கூட இருக்கவில்லை என்பதை நான் கண்டேன். எங்கு அவர்கள் குளிரால் நடுநடுங்கிக் கொண்டிருந்தார்கள்! அப்படிப்பட்ட நிலை இருந்தது! அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

குளிரின் பெயரடையாளம் கூட இல்லை. இன்னும் கூறப்போனால், நான் ஒரு வெப்பமான காய்ச்சலில் கடந்து செல்வது போன்று உணர்ந்தேன். எனது பதற்றம் முற்றிலும் அகன்று கொண்டே இருந்தது. அப்பொழுது இரவின் இருள் முழுமையாக தனது ஆளுமையை நிலைநாட்டியிருந்தது. நான் முற்றிலும் துணிச்சல் கொண்டவனாக, ஆனால், மறைந்து, மறைந்து காஃபிர்களின் முகாமுக்குள் சென்றடைந்து விட்டேன். அப்பொழுது நான் அபூஸுஃப்யானை ஓரிடத்தில் நின்று கொண்டு குளிர்க் காயக் கண்டேன். நான் அவரைப் பார்த்ததும் உடனடியாக எனது வில் அம்பை நேராக ஆக்கிக் கொண்டேன். நான் எனது அம்பை விட்டே இருப்பேன். ஆனால், பிறகு எனக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் நினைவுக்கு வந்து விட்டது. நான் அம்பு எய்யாமல் இருந்து கொண்டேன்.

ஒருவேளை அந்த நேரத்தில் நான் அம்பு விட்டிருந்தால் அபூஸுஃப்யான் எந்த அளவுக்கு அருகில் இருந்தார் என்றால், அவர் நிச்சயம் தப்பியிருக்க முடியாது. அப்பொழுது அபூ ஸுஃப்யான் தன்னுடைய ஆட்களுக்குத் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிட்டுக் கொண்டிருந்தார். பிறகு அவர் என் கண் முன்னாலேயே ஒட்டகத்தில் ஏறி அமர்ந்து கொண்டார். ஆனால், பதற்றத்தால் அவருக்குத் தனது ஒட்டகத்தின் கால்களை அவிழ்க்க வேண்டும் என்பது கூட நினைவிருக்கவில்லை. அதற்குப் பிறகு நான் திரும்பி வந்தேன்.

அவர்கள் கூறினார்கள்: நான் எனது முகாமை அடைந்த போது, அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். நான் அன்னார் (ஸல்) தொழுது முடிக்கும் வரை காத்துக் கொண்டிருந்தேன். பிறகு அன்னாருக்கு முழு நிகழ்வைப் பற்றியும் தகவல் கொடுத்தேன். இதனால் அன்னார் (ஸல்) அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள். மேலும் இது எந்தவொரு முயற்சி அல்லது ஆற்றலின் விளைவு அல்ல ; மாறாக, அல்லாஹ்வின் அருளால் மட்டுமே ஏற்பட்டுள்ளது. அவன் தனது ஆற்றலால் கூட்டங்களைத் தோல்வியுறச் செய்து விட்டான் என்று கூறினார்கள். இதற்குப் பிறகு, காஃபிர்கள் ஓடி விட்ட செய்தி உடனடியாக முஸ்லிம்களின் முகாம்கள் அனைத்திலும் பிரசித்திப் பெற்று விட்டது.

இந்த நிகழ்வை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் எடுத்துக் கூறி எழுதியுள்ளார்கள். அன்னார் (ரலி) இவ்வாறு கூறுகிறார்கள்: இரவின் மூன்றில் ஒரு பகுதியில் - இறுதிப் பகுதியில், ஏறத்தாழ 25 ஆயிரத்துக்கு அருகில் நிராகரிப்பாளர்களின் போர் வீரர்கள் கூடாரமிட்டிருந்த அந்த மைதானம் ஒரு காடு போன்று வெறிச்சோடி போனது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)அவர்களுக்கு அந்த நேரத்தில் மேலான அல்லாஹ் இல்ஹாம் மூலமாக, உமது எதிரியை நாம் விரட்டியடித்து விட்டோம் என்று கூறினான்.

அல்லாஹ் கூறியிருந்தான். அப்பொழுதுதான் பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபா பெருமக்களிடம் யார் முன் வருகிறார்? என்று கேட்டார்கள். அன்னார் (ஸல்) உண்மை நிலையை அறிந்து வருவதற்காக யாரையாவது அனுப்ப நினைத்தார்கள். தமக்கு அக்கம் பக்கம் அமர்ந்திருந்த ஸஹாபாவுக்குக் குரல் கொடுத்தார்கள். அது குளிர் காலமாக இருந்தது. முஸ்லிம்களிடம் போதுமான அளவுக்கு ஆடை கூட இருக்கவில்லை. குளிரினால் நாவுகள் வரை உறைந்து போயிருந்தன. அவர்களால் பேச முடியவில்லை.

ஸஹாபிகளில் சிலர் கூறுகிறார்கள்: நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குரலைக் கேட்டோம். நாங்கள் பதில் கூறவும் விரும்பினோம். ஆனால், எங்களால் பேச முடியவில்லை. ஹுஸைஃபா ஒருவர் மட்டும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்ன வேலை? என்று கேட்டார்.

இங்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்களை அழைத்ததாகக் கூறவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: (ஹுஸைஃபா (ரலி) ) அவர்கள் கூறினார்கள்: அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் நீர் இல்லை ; எனக்கு வேறு யாராவது ஒரு நபர் வேண்டும் என்று கேட்டார்கள். பிறகு, அன்னார் (ஸல்) யாராவது இருக்கிறீர்களா? எனக் கேட்டார்கள். ஆனால், பிறகு குளிரின் கடுமையின் காரணமாக விழித்துக் கொண்டிருந்தவர்களாலும் பதில் கூற முடியவில்லை.

ஹுஸைஃபா (ரலி) அவர்கள் மீண்டும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் இருக்கின்றேன் என்று கூறினார்கள். இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்களை இவ்வாறு கூறி அனுப்பி வைத்தார்கள். அல்லாஹ் எனக்கு உமது எதிரியை நாம் விரட்டியடித்து விட்டோம் என்று செய்தி தெரிவித்துள்ளான். எதிரியின் நிலை என்ன? என்று சென்று பார்ப்பீராக!

ஹுஸைஃபா அகமுக்கு அருகில் சென்றார்கள். எதிரிகளின் போர் வீரர்கள் இன்றி களம் முற்றிலும் காலியாக இருப்பதைக் கண்டார்கள். திரும்பி வந்து, ஷஹாதத் கலிமா கூறியவாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூதுவத்தை மெய்ப்பித்தார்கள். எதிரி களத்தை விட்டுச் சென்று விட்டான் என்று கூறினார்கள்.

மற்ற விபரங்களை இனி எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்!

உங்கள் அனைவருக்கும் தெரியும். உலகத்தின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே செல்கிறது. அழிவின் பக்கம் செல்கிறது. அமெரிக்காவும், வல்லரசுகளும் நீதியுடன் செயல்பட விரும்பவில்லை. போர் விரிவடைந்து கொண்டே செல்கிறது. மேலான அல்லாஹ் அஹ்மதிகளையும், அப்பாவிகளையும் இதன் அச்சமூட்டக் கூட்டக் கூடிய மற்றும் தீய தாக்கங்களிலிருந்து பாதுகாப்பானாக!

இதற்காக நாம் அல்லாஹ்வுடன் தொடர்பை அதிகரித்துக் கொள்ள வேண்டி வரும். துஆக்களின் பக்கம் மிக அதிக கவனம் செலுத்த வேண்டி வரும். ஒவ்வோர் அஹ்மதியும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு நிலைமைகள் மிக அதிகமாக மோசமாகிக் கொண்டே இருக்கின்றன.அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். வங்காள தேசத்தின் அஹ்மதிகளின் நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அந்த மக்கள் மீதும் மிகவும் கடுமை காட்டப்படுகிறது. மேலான அல்லாஹ் எல்லார் மீதும் கருணையும், அருளும் புரிவானாக!

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * *

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஐரோப்பிய சுற்றுப் பயணம் - ஜெர்மனி

நீங்கள் உங்களது கல்வியால் ஆன்மாவின் ஆரோக்கியத்திற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும். மற்ற மார்க்கங்களின் போதனைகளை கற்றுக் கொண்டு இஸ்லாத்தின் சிறப்புகளையும், போதனைகளையும் நீங்கள் மக்களுக்கு கூற வேண்டும். நீங்கள் இந்த நகரம் மற்றும் இந்த நாட்டில் இஸ்லாத்தின் தூதுவர்கள் ஆவீர்கள்

உலகை அழிவிலிருந்து எப்படி பாதுகாக்க வேண்டும்? ஒன்று, உலகியல் அல்லது அரசியல் முயற்சிகள் இருக்கின்றன. அதில் நாம் அமைதி, நேசம், அன்பு ஆகியவற்றிற்கான தூதுச் செய்தியை வழங்கிக் கொண்டிருக்கின்றோம்

ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி பயின்று கொண்டிருக்கின்ற ஒரு முபல்லிஃக், ஒரு முரப்பி ; அவர் உலகிற்கு அல்லாஹ்வின் இருப்பைப் பற்றிய உணர்வை ஏற்படுத்த வேண்டும். இறைவனுக்கு அருகில் மக்களை கொண்டு வருவதற்கான உங்களது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும்

நமது ஒவ்வொரு பணியையும் ஒவ்வொரு செயலையும் வல்ல இறைவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வு இதயத்தில் உருவாகாத வரை உலகில் அமைதியையும், நீதியையும், நேசத்தையும் நிலை பெறச் செய்ய முடியாது. எனவே நீங்கள் எங்கு உலகிற்கு இந்த உணர்வை ஏற்படுத்த உங்களது முயற்சிகளை செய்வீர்களோ அங்கு எல்லாவற்றையும் விட முதலில் நீங்கள் உங்களை அந்த உணர்வு மற்றும் பொறுப்பிற்கு தகுதியுடையவராக ஆக்கிக் கொள்ள வேண்டும்

நீங்கள் வல்ல இறைவனுடன் உங்களது தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நீங்கள் உண்மையான வடிவில் மற்றவர்களுக்கு கூறமுடியும். இறைவன் யார்? இறைவனது போதனை என்ன? இறைவனுக்கு தனது படைப்பினத்துடன் எவ்வளவு நேசம் இருக்கின்றது? என்பதை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்

(ஜாமிஆ மாணவர்களுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய முக்கிய அறிவுரைகள்)

### ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜெர்மனி ஜாமிஆ அஹ்மதிய்யா திறப்பு விழாவில் ஆற்றிய உரை

### டிசம்பர் 16 - 2012

### பாகம் - 3

**சென்ற இதழின் தொடர்ச்சி...........**

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

எனவே இந்த அனைத்துப் பாடங்களையும் ஆழமாக படிப்பதும் உங்களுக்கு அவசியமாகும். பின்னர் இதுவும் அவசியமாகும். அதாவது, சில சிறப்பு வகையைச் சேர்ந்த தேன் இருக்கின்றது. அது ராணித் தேனீக்காக தயார் செய்யப்படுகின்றது. இதில் புலமைப் பெறுவது தொடர்பான விஷயம் கூறப்பட்டுள்ளது. அதாவது நீங்கள் படித்து விட்டு வெளியேறும் போது உங்களில் சில மாணவர்கள் பல்வேறு பாடங்களில் நிபுணத்துவம் பெறுவதற்காகவும் செல்வார்கள். அவர்கள் பல்வேறு வகையான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய சிறப்பு வகையான தேன் ஆவர். எனவே இந்த உதாரணத்தை நீங்கள் உங்கள் கருத்தில் கொண்டால் பின்னர் நமக்கு இதிலிருந்து ஒரு விநோதமான பாடம் கிடைத்துக் கொண்டே செல்லும். ஆனால், இந்த அனைத்து விஷயங்களையும் பெற்றுக் கொண்ட பின்னர் தேனீக்கள் என்ன படிப்பினையைத் தருகின்றது?

அல்லாஹ் கூறினான்:

فَاسْلُكِي سُبُلَ رَبِّكِ ذُلُلًا

(அந்நஹ்ல் : 70)

பொருள்:தனது இறைவனின் வழிகளில் பணிவை மேற்கொண்டவாறு செல்லக் கூடியவை ஆகும். அதாவது, திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் பல்வேறு மார்க்கங்களைக் குறித்த கல்வியைப் பயின்ற பிறகு ஒரு முபல்லிஃக் மற்றும் முரப்பியிடத்தில் ஆணவமும் அகந்தையும் உருவாகக் கூடாது. மாறாக, மீண்டும் பணிவைக் காட்ட வேண்டும். மேலும், மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய வழிகளில் நடக்க வேண்டும். தேனீக்களைக் குறித்து شِفَآءٌ لِّلنَّاسِ என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. ஆக, தேனீக்கள் மக்களுக்கு (நோயிலிருந்து) குணமடைவதற்கும், உடல் ஆரோக்கியத்திற்குமான ஏற்பாட்டை செய்கின்றன. எனவே நீங்கள் உங்களது கல்வியினால் ஆன்மாவின் ஆரோக்கியத்திற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும். ஆன்மிக (நோய்களிலிருந்து) குணம் (பெறுதல்) என்பது நமது முபல்லிஃக்மார்கள் மூலமாக கிடைக்க வேண்டும். நீங்கள் எப்போதும் இதனை உங்களது நோக்கமாக உங்கள் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். எனவே இந்த விஷயங்களை நீங்கள் உங்கள் கருத்தில் கொண்டிருக்கும் போது, பின்னர் நீங்கள் காண்பீர்கள்; அதாவது உலகம் உங்களின் பக்கம் எவ்வாறு ஈர்க்கப்பட்டு வந்து கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள். மேலும் உங்களது நோக்கங்களில் எவ்வாறு உங்களுக்கு வெற்றி கிடைக்கின்றது என்பதை கண்டு கொள்வீர்கள்; உலகிற்கு இஸ்லாத்தின் அழகிய போதனையைப் பற்றி எவ்வாறு தெரிய வருகின்றது என்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள். அவர்கள் ஜெர்மனியில் வசிக்கக் கூடிய இளைஞர்களாக இருக்கட்டும்; அல்லது பெல்ஜியத்திலிருந்து இங்கு வந்து கல்வி பயிலக் கூடிய மாணவர்களாக இருக்கட்டும்; அல்லது ஃபிரான்ஸிலிருந்து இங்கு வந்து கல்வி பயின்று கொண்டிருக்கின்ற பிள்ளைகளாக இருக்கட்டும் அல்லது ஹாலந்திலிருந்து இங்கு வந்து கல்வி பயின்று கொண்டிருக்கின்ற மாணவர்களாக இருக்கட்டும்; எவர்கள் முபல்லிஃக் ஆக உருவாகி (செயல் களத்திற்கு) செல்வார்களோ அவர்கள் அங்கு சென்று தப்லீஃக் செய்வார்கள். ஒவ்வொருவரும் தத்தமது பகுதிகளுக்குச் சென்று ஓர் ஆன்மாவிற்கு குணமளிப்பதற்கான ஏற்பாட்டை செய்து கொண்டிருக்க வேண்டும். எனவே நீங்கள் அந்த குணமளிப்பவராக ஆகிவிடுங்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: கல்வி பயில்வதைப் பொருத்த வரை நான் பலமுறை உதாரணங்களை எடுத்துரைத்திருக்கின்றேன். அதாவது, ஜமாஅத் அல்லாத மவ்லவிமார்களிலும் பெரும் பெரும் அறிஞர்கள் இருக்கின்றனர். ஏராளமான பெரிய, பெரிய சான்றுகளை அவர்கள் மனனம் செய்து வைத்துள்ளனர். ஹதீஸ்களின் ஏராளமான நூல்களை அவர்கள் மனனம் செய்து வைத்துள்ளனர். திருக்குர்ஆனின் வசனங்களை அவர்கள் மனனம் செய்து வைத்துள்ளனர். எண்களை குறிப்பிட்டு விட்டு அதற்கான சான்றுகளையும் கொடுத்து விடுகின்றனர். ஆயினும், காலத்தின் இமாமின் மூலமாக அவர்களுக்கு பயிற்சி கிடைக்கவில்லை. எனவே ஒன்று, அந்த வசனங்கள் மற்றும் ஹதீஸ்களை அவர்களால் சரியாக புரிந்து கொள்ள முடியாது. இரண்டாவது, இந்த அறிவு அவர்களிடம் ஆணவத்தை உருவாக்கி விட்டது. மேலும் இந்த ஆணவம் அவர்களை வானத்தின் பக்கம் கொண்டு செல்வதற்கு பகரமாக பூமியின் அடி ஆழங்களின் பக்கம் கொண்டு சென்று விடுகின்றது. மேலும் அவர்கள் உலகத்தின் பக்கம் குனியக் கூடியவர்களாக ஆகிவிடுகின்றனர். அவர்களின் பொய்யான

அகந்தையும், பொய்யான கௌரவங்களும் அவர்களுக்கு ஆன்மிக அந்தஸ்தை வழங்குவதில்லை. ஒரு சரியான, உண்மையான முபல்லிஃக் மற்றும் மார்க்க அறிஞரிடம் இருக்க வேண்டிய அந்தஸ்தை அது வழங்குவதில்லை. எனவே இந்த விஷயங்களை நீங்கள் கருத்தில் கொண்டால் பின்னர் நீங்கள் இதிலிருந்து மேலும் படிப்பினையைப் பெறுவீர்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எனவே நான் மீண்டும் இதனையே கூறுவேன். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தின் பணிகளுக்காக நீங்கள் உங்களை நீங்களே சமர்ப்பித்துள்ளீர்கள் என்றால், உண்மையான உதவியாளராக ஆக வேண்டும் என்று அர்ப்பணித்துள்ளீர்கள் என்றால் பின்னர், இந்தக் கல்வி நிறுவனத்தில் இருந்து கொண்டு உங்களது கல்வியின் தரத்தை உயர்த்திக் கொண்டே செல்ல வேண்டும். மேலும் உங்களது ஒழுக்கத்தின் படித்தரங்களை உயர்த்திக் கொண்டே செல்ல வேண்டும். உங்களது எல்லா வகையான பழக்க வழக்கங்களையும் ஓர் உயர்ந்த மற்றும் நல்லொழுக்கம் கொண்ட ஒரு மனிதனிடத்தில் இருக்கின்ற பழக்க வழக்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அப்போது தான் இந்தப் பகுதியிலும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை முன்வைக்க முடியும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இங்குள்ள இந்த சிறிய நகரத்தைக் குறித்து இதன் மக்கள் தொகை 22 ஆயிரம் என்று கூறப்படுகின்றது. மேலும், நீங்கள் அனைவரும் இங்கே ஆசியாவைச் சேர்ந்தவர்களே ஆவீர்கள். ஏதாவது ஐரோப்பிய நாட்டைச் சார்ந்த மாணவர்கள் ஓரிருவரே இருக்கின்றனர். மேலும் அந்த நாட்டின் உள்ளூர் குடிமக்களாக இருக்கின்றனர். நீங்கள் இங்கு நிச்சயமாக படித்து வளர்ந்துள்ளீர்கள். மேலும் இங்கே பிறந்துள்ளீர்கள். எனினும், உருவம் மற்றும் தோற்றத்தால் நீங்கள் ஆசியாவைச் சேர்ந்தவர்களே ஆவீர்கள். எனவே இந்த நகரத்தில் நீங்கள் வெளியே செல்லும் போது, உங்களை பார்த்து, நூறு நூற்றி ஐம்பது மாணவர்கள் இந்த சிறிய நகரத்தில் எங்கிருந்து வந்து விட்டனர்? என்று அச்சமடையக் கூடாது. இவர்கள் தாலிபான்களைப் போன்ற நபர்களாக இருப்பார்களோ? இவர்கள் தீவிரவாதத்தை விரும்பக் கூடியவர்களாக இருப்பார்களோ? இவர்கள் பயங்கரவாதிகளாக இருப்பார்களோ? இவர்களின் தாடிகளும், தொப்பிகளும், இவர்களின் ஆடைகளும் விநோதமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றனவே? என்று மக்கள் பீதி அடைந்து விடக் கூடாது. சிறிய நகரங்களில் நபர்கள் மிக விரைவாகவே பிரபல்யமடைந்து விடுகின்றன. எனவே இந்த நகரத்தில் நீங்கள் உங்கள் முன்மாதிரியை வெளிப்படுத்துகின்ற போது, உங்களது நல்லொழுக்கங்களை நீங்கள் வெளிப்படுத்தும் போது, நீங்கள் கடைகளுக்கு செல்லும் போது, கடைவீதிகளில் செல்லும் போது, சாலைகளில் செல்லும் போது, நீங்கள் மக்களுக்கு ஸலாம் கூறினால், நல்லொழுக்கத்துடன் நடந்து கொண்டால் மேலும் உங்கள் முகங்களில் மென்மை வெளிப்பட்டால் பின்னர் இந்த நகரம் சுயமே உங்களை ஏற்றுக் கொண்டு விடும். ஆக, இது மிக முக்கியமான பொறுப்பாகும்.

ஜாமிஆவில் ஏழு, எட்டு வருடங்கள் படித்த பிறகு தான் நீங்கள் செயற்களத்திற்கு செல்வீர்கள் என்பதன்று; மாறாக, உங்களுடைய செயற்களம் இப்போதிலிருந்தே துவங்கி விட்டது. இந்த நகரத்தின் 22 ஆயிரம் மக்கள் தொகையானது உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத் எதனை கூறுகின்றதோ அதன் படி செயலாற்றுகின்றதா? இல்லையா? என்று பார்த்துக் கொண்டிருக்கின்றது. மேலும் அதற்கான சரியான சித்திரம் உங்களது செயல்களிலிருந்தும், நீங்கள் எழுந்து, அமர்கின்ற விஷயங்களிலிருந்தும், உங்களது நடத்தைகளிலிருந்தும், நீங்கள் உரையாடும் விஷயங்களிலிருந்தும், நீங்கள் நகரத்தில் கடைவீதிகளில் சென்று வருவதிலிருந்தும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். மேலும் இந்த விஷயத்தை எப்போதும் நினைவிற் கொள்ளுங்கள்; இந்த நகரத்தில் நீங்கள் முபல்லிஃக் ஆகிவிட்டீர்கள்; நீங்கள் முதல் வகுப்பு மாணவராக இருந்தாலும் சரியே ; அல்லது ஐந்தாவது, ஆறாவது, அல்லது கடைசி வகுப்பு மாணவராக இருந்தாலும் சரியே ; நீங்கள் இந்த நகரத்தின் முரப்பிமார்களும் ஆவீர்கள் ; நீங்கள் இந்த நகரத்திலும் இந்த நாட்டிலும் இஸ்லாத்தின் தூதுவர்களும் ஆவீர்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்)அவர்கள் கூறினார்கள்: எனவே இந்த விஷயங்களை நீங்கள் நினைவிற் கொள்ளுங்கள். மேலும் உங்களது பொறுப்புகளை புரிந்து கொள்ளுங்கள். தூயவர்களாக திகழ்ந்து கல்வியின் பக்கம் கவனம் செலுத்துங்கள். மேலும், ஜமாஅத்திற்கு இழுக்கு சேர்க்கக் கூடிய எந்தவகையான வெளிப்பாடும் உங்களிடம் இருந்து நிகழக் கூடாது. நீங்கள் இந்த அனைத்து விஷயங்களின்படியும் அமல் செய்யக் கூடியவர்களாக திகழவும், உண்மையான வடிவில் முபல்லிஃக் மற்றும் முரப்பியாக ஆகி இங்கு இஸ்லாத்தின் ஒளியைப் பரப்பக் கூடியவர்களாக திகழவும் அல்லாஹ் அருள் செய்வானாக! ஆமீன். தற்போது துஆ செய்யுங்கள்.

இதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் துஆ செய்து வைத்தார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இந்த உரை பிற்பகல் 12.30 மணி வரை அமைந்திருந்தது.

கவுன்ஸில் ஜெனரல் மற்றும் அமெரிக்கன் கவுன்ஸ்லெட் ஃபிரங்ஃபார்ட் . Mr. Kevin Milas அவர்களும் இந்த திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்தார்கள். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அன்னார் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்தித்தார்கள்.

துவக்க அறிமுகத்திற்குப் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இந்த வருடம் நான் 2012 ஜூன் மாதத்தின் துவக்கத்தில் அமெரிக்க சுற்றுப் பயணத்தில் சென்றிருந்தேன். மேலும், கேப்பிடல் ஹில்லில் உரை நிகழ்த்தியிருந்தேன். 30 காங்கிரஸ்மேன் கலந்து கொண்டிருந்தனர். மேலும் இதர விருந்தினர்களும் கலந்து கொண்டிருந்தனர். அங்கு பல்வேறு விவகாரங்களில் மக்களுடன் உரையாடல் நிகழ்ந்திருந்தது.

அதற்கு அவர் கூறினார்: நான் ஆஃப்கானிஸ்தான், கஸக்கிஸ்தான் மற்றும் துருக்கியில் பணி செய்திருக்கின்றேன். ஆஃப்கானிஸ்தான் தொடர்பாக பேச்சு நடந்த போது, வல்ல இறைவன் அங்கு மாற்றத்தைக் கொண்டு வருவானாக! என்று என்னால் துஆ மட்டுமே செய்ய முடியும் என்று ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

ஆஃப்கானிஸ்தானில் பள்ளிக் கூடங்கள் திறப்பது மற்றும் ஏனைய வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக கூறப்பட்ட போது, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் அங்கு என்ஜி ஓக்களை ஆர்கனைஸ் செய்ய முடியும். என்.ஜி ஓக்களுடன் இணைந்து பணி செய்வதை மக்கள் அதிகம் விரும்புகின்றனர். ஏனெனில், அவர்கள் அரசாங்கத்தைக் காட்டிலும் அதிகம் பணம் கொடுக்கின்றனர்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அசல் விஷயம் என்னவென்றால், நீங்கள் அங்குள்ள மக்களிடம் நம்பிக்கையை உருவாக்குங்கள். அப்போது தான் அவர்கள் சுயமே பணி செய்வார்கள்; மேலும் மற்றவர்களை அவர்கள் அதிகம் சார்ந்திருக்க மாட்டார்கள்.

அமெரிக்கன் கவுன்ஸல் ஜெனரல் அவர்களுடன் அவருடைய ஜெர்மன் பொலிட்டிக்கல் ANA அவர்களும் வந்திருந்தார். அந்தப் பெண்மணி கூறினார்: அஹ்மதிய்யா சமூகம் மிகவும் சுயமரியாதை மிக்க சமூகம் ஆகும். சமூகத்தில் அவர்களுக்கு மிகுந்த மரியாதை இருக்கின்றது. மேலும், மற்ற முஸ்லிம் அமைப்புகளைக் காட்டிலும் அதிகம் ஆர்கனைஸ்ட் ஆக இருக்கின்றது. உங்களுடைய எண்ணிக்கை குறைவுதான். எனினும், இதை விட அதிகமாக உங்களுக்கு கண்ணியம் இருக்கின்றது.

கவுன்ஸில் ஜெனரல் விசாரித்த போது ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இரண்டு நாட்களுக்குப் பிறகு டிசம்பர் 19-ம் தேதி நான் ஜெர்மனியில் இருந்து லண்டன் திரும்பி செல்ல இருக்கின்றேன்.

இறுதியில், நான் ஹுஸூர் அன்வர் அவர்களை சந்தித்தது எனக்கு கிடைத்த அருமையான வாய்ப்பாகும் என்று கவுன்ஸல் ஜெனரல் கூறினார்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் பிற்பகல் ஒரு மணி வரை சந்திப்பு நிகழ்த்துவதற்கு கவுன்ஸல் ஜெனரலுக்கு வாய்ப்பு கிடைத்தது.

இதன் பிறகு நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்)அவர்கள் டைனிங்க ஹாலுக்கு வருகை தந்தார்கள். அங்கு அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்த அனைத்து விருந்தினர்களும், ஜமாஅத்தின் பொறுப்பாளர்களும், ஜாமிஆ மாணவர்களும் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் இணைந்து உணவு அருந்தினர்.

இதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மீட்டிங்கு ரூமிற்கு சென்றுவிட்டார்கள். அங்கு மீடியாக்களின் பிரதிநிதிகள் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்தித்தார்கள். மேலும் பத்திரிகையாளர்கள் சந்திப்பும் நிகழ்ந்தது.

## ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் மீடியாவின் பிரதிநிதிகளின் சந்திப்பு மற்றும் பத்திரிகையாளர் சந்திப்பு

பத்திரிகையாளர் சந்திப்பின் துவக்கத்தில் அச்சு மற்றும் காட்சி ஊடகங்களின் பிரதிநிதிகள் தங்களை அறிமுகம்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 THU 31 OCT - 07 NOV 2024 Issue No.44 & 45

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

செய்து கொண்டனர்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் உரையின் ஜெர்மன் மொழியாக்கத்தை கேட்கத் தவறிய ஒரு பத்திரிகையாளர் இவ்வாறு கூறினார்: எனக்கு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உருது மொழியில் நிகழ்த்திய உரை புரியவில்லை.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எனது உரையின் சாராம்சம் இதுவாக இருந்தது. அதாவது, அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சாராத அந்த அனைத்து விருந்தினர்களுக்கும் நான் முதலில் நன்றி தெரிவித்துக் கொண்டேன். அதாவது, அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்ததற்காக நன்றி செலுத்தினேன். மேலும் பின்னர் நான் மாணவர்களிடம் உரை நிகழ்த்தினேன். மேலும், அவர்களுக்கு நான் அறிவுரை வழங்கினேன். அதாவது அவர்கள் இங்கு இஸ்லாமிய போதனைகளை கற்றுக் கொண்டிருக்கின்றனர். இன்னும் கூறப்போனால் அவர்கள் இஸ்லாமியப் போதனைகளை மட்டும் கற்கவில்லை மாறாக, ஏனைய மார்க்கங்களின் போதனைகளையும், மேலும் அவற்றின் ஒப்பீடுகளையும் கற்றுக் கொண்டிருக்கின்றனர். கல்வியை முழுமை செய்த பிறகு அவர்கள் அதன்படி பிறரை அமல் செய்ய வைக்க வேண்டும். பிறரை அதன் படி செயல்பட வைப்பதற்கு முன் முதலில் அந்தப் போதனையின் அழகிய முன்மாதிரியை நீங்கள் உங்களிடத்தில் வெளிப்படுத்த வேண்டும்; அப்போதுதான் மக்களுக்கு சரியான இஸ்லாமிய போதனைகள் என்ன? என்பது தெரிய வரும் என்றும் நான் அவர்களுக்கு அறிவுரை செய்தேன். இது எனது சொற்பொழிவின் சுருக்கமாகும்.

அடுத்து, முஸ்லிம்கள் நீங்கள் பேசுகின்ற அந்த அடிப்படையான விஷயங்கள் எவை? என்று ஒரு பத்திரிகையாளர் கேட்டார்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தின் அடிப்படை போதனைகள் எந்த வகையிலும் வேறுபட்டவை கிடையாது. இஸ்லாம் ஏக இறைவன் மீது மட்டுமே நம்பிக்கை கொள்கின்றது. மேலும், இஸ்லாம் முஹம்மத் (ஸல்) அவர்களின் மீது நம்பிக்கை கொள்கின்றது. உங்களுடைய பரிசுத்த வேதம் அதாவது திருக்குர்ஆன் மீது உங்களுடைய நம்பிக்கை வலுவானதாக இருக்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது. மேலும், முந்தைய அனைத்து நபிமார்கள் மீதும் உங்களுக்கு உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது. மேலும் முந்தைய அனைத்து நபிமார்களின் வேதங்களின் மீதும் நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது. நீங்கள் அனைத்து மார்க்கங்களுக்கும் மரியாதை செலுத்துங்கள் என்று இஸ்லாம் கூறுகின்றது. நீங்கள் சமூகத்தில் சகோதரத்துவம், அன்பு மற்றும் அமைதியை பரவச் செய்யுங்கள் என்று இஸ்லாம் கூறுகின்றது.இவை அனைத்தும் திருக்குர்ஆனிலும், ஹதீஸ்களிலும் எழுதப்பட்டுள்ளன. மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கூற்றுகளிலிருந்தும் எங்களுக்கு இந்த விஷயங்களுக்கான கட்டளை கிடைக்கின்றது. ஆக, இதுதான் எங்களது கொள்கைகள் ஆகும். மேலும், நாங்கள் இதன்படியே செயல்பட்டு வருகின்றோம். ஆனால், சில முஸ்லிம் பிரிவுகள் இந்த போதனைகளின்படி அமல் செய்வதில்லை என்பதை நீங்கள் காண்பீர்கள். **(தொடரும்.........)**

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை, 01.03.2013)

தமிழாக்கம்

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

** * * * * * *

**1- ம் பக்கத் தொடர்ச்சி.... (மல்ஃபூஸாத்)**

இறையச்சத்திலும் பிரபலமடைந்திருந்த ஒரு நபரின் குரலை ஸஹாபிகள் கேட்டனர்; நான் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் புறமிருந்து வந்துள்ளேன் என்று அந்த நபர் கூறினார். இதனைக் கேட்டதும், ஸஹாபிகள் அவருடன் இணைந்து கொண்டனர். பின்னர் பித்துப் பிடித்தவர்களைப் போன்று அவரை பின்பற்றிச் சென்றனர். நான் மீண்டும் கூறுகின்றேன்: அந்த விஷயம் நிச்சயமாக ஒரேயொரு விஷயமாக இருந்தது. அந்த விஷயம் தான் அவர்களிடம் இந்த நிலையை உருவாக்கியது. மேலும், அந்த விஷயம் என்பது ஈமானாக இருந்தது. நினைவிற் கொள்ளுங்கள்! ஈமான் என்பது மகத்தான விஷயமாகும்.

**இறையிருப்பின் மீதான நம்பிக்கை**

ஆங்கிலேயர்களும், மேற்கத்திய சமுதாயங்களும் உலகத்தை தேடுவதிலும், விருப்பங்களிலும் ஈடுபட்டுள்ளனர். துவக்கத்தில் ஒரு கற்பனையான நம்பிக்கையின் அடிப்படையில் பணியை துவங்குகின்றனர். நூற்றுக்கணக்கான உயிர்கள் அந்தப் பணியின் போது பலியாகின்றன. ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான ரூபாய்கள் வீணாகின்றன. இறுதியில் ஒரு விஷயத்தை அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.அவ்வாறிருக்க, இறைவனை அடைய முடியாது என்று கூறுபவர்கள் மீது மிகவும் ஆச்சரியமும், வியப்பமும் ஏற்படுகின்றது. முஜாஹிதா செய்தும், கடும் முயற்சிகள் செய்தும் இறைவனைப் பெறாதவர் எவரும் இல்லை! இறைவனை அடைய முடியும்; மேலும் மிக விரைவாக அடைய முடியும். ஆனால் அவனைப் பெறுகின்றவர் எங்கே இருக்கின்றார்?

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 42, காதியான் பதிப்பு 2018)

** * * * * * *

**1- ம் பக்கத் தொடர்ச்சி.... (தஃப்ஸீரே கபீர்)**

பலவீனமான ஈமான் கொண்ட மக்கள் தனித்து (சென்று) விடுகின்றனர். மேலும் இறைவன் தனது இயக்கத்தின் வலிமையையும், அதன் மகத்துவத்தையும் மேலும் அதிகரித்து விடுகின்றான்.

தற்போது இந்த பொருள்களை சிந்தனை செய்யுங்கள்; மேலும் பாருங்கள் ! இந்தப் பொருள் அனைத்து நபிமார்களுக்கும் குறிப்பாக முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை எவ்வாறு ஷைத்தானின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாப்பாக வைக்கின்றது என்பதைப் பாருங்கள்! இன்னும் கூறப்போனால், எதிரான நிகழ்வு காணக் கிடைக்கின்றது. அதாவது நபிமார்கள் மீது ஷைத்தானின் ஆதிக்கம் என்பது ஒருபக்கம் இருக்கட்டும்; ஷைத்தான் அவர்களிடமிருந்து அடிவாங்குகிறான். மேலும்,

اِنَّ عِبَادِیۡ لَیۡسَ لَکَ عَلَیۡہِمۡ سُلۡطٰنٌ ؕ
وَ کَفٰی بِرَبِّکَ وَکِیۡلًا ﴿۶۶﴾

. என்ற திருக்குர்ஆனின் இந்த வசனத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.

பொருள்: நிச்சயமாக எனது அடியார்கள்! அவர்கள் மீது உனக்கு எந்த அதிகாரமும் இல்லை. (என் அடியாரே உமக்குப்) பாதுகாப்பாளனாக இருப்பதற்கு உம் இறைவனே போதுமானவன். ( 17 : 66)

இவ்வாறு இந்த வசனத்தின் பொருளை நான் வழங்கிய பொருளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நான் கொடுத்த பொருளே சரியானதாக இருக்கின்றது என்பதும் நிரூபணமாகும். மேலும் திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் செய்த பொருள் தவறானதாகும் என்பதும் நிரூபணமாகின்றது. (தஃப்ஸீர் கபீர், தொகுதி 6, பக்கம் 74, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

** * * * * * *

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad